JAFFNA COLLEGE
MAR 11 1946
VADDUKODDAI, CEYLON

REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 16 | சுன்னாகம்—பார்த்திப—மாசி உ௬, 10-3-'46—ஞாயிறு | இதழ் 32

# ஊழல் மிகுந்த நிர்வாகம்

## இலங்கை அரசாங்கச் சீர்கேடு

—'ஈழகேசரி' விசேஷ நிருபர்—

**"பழைய பாவங்களுக்கு ஐரோப்பா இப்போது பிராயச்சித்தஞ் செய்கின்றது. அதே போலச் சிங்களரும் பாவஞ் செய்தால் அதற்காக அவர்கள் ஈடு செய்ய நேரிடும். கர்மம் என்பது தனிப்பட்டவர்களையும் தேசங்களையும்பாதிக்கின்றது" என ஸ்ரீ பி. டி. எஸ். குலரத்ன உலக விவகாரம் பற்றி ஈழகேசரி விசேஷ நிருபருடன் பேசும்போது குறிப்பிட்டார்.**

கடந்த வாரம் ஸ்ரீ குலரத்ன யாழ்ப்பாணம் வந்திருந்தார். அப்போது ஈழகேசரிக்கென அவர் பிரத்தியேகமாக அளித்த பேட்டியில் இலங்கை அரசியல், அரசியற் கட்சிகள், இலங்கை அரசாங்கத்தின் நிர்வாகச் சிதைவுகள், தாய்மொழி, கல்விப் பிரச்னை போன்ற பல விஷயங்கள் பற்றிச் சில ருசிகரமான அபிப்பிராயங்களைத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ குலரத்ன கொழும்பு ஆனந்தக்கல்லூரியின் அதிபராக விருந்தவர். இப்போது அரசாங்கசபை அங்கத்தவராக விருக்கின்றார். நல்ல கல்வி ஞானம் படைத்தவர். சொந்த நாட்டுக் கலைவளர்ச்சியில் ஆர்வம் மிகுந்தவர். தேசியம் பேசும் இச் சிங்களக் கலைஞனுக்கு நாட்டிற் கௌரவம் உண்டு. இவரை நமது பிரதிநிதி சந்தித்துக் கேட்ட சில கேள்விகளையும், அவர் கூறிய விடைகளையும் இங்கு காணலாம்.

### புதிய அரசியல் திட்டத்தைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் யாது?

திட்டம் ஒருபுறமிருக்க, அதை ஏற்று நடத்தும் மனநிலையே மிகவும் முக்கியமானது. குடியேற்ற நாட்டு மந்திரி நிர்வாகப் பொறுப்பை ஓரளவுக்கு நாட்டு மக்களிடமே ஒப்படைத்திருக்கின்றார். எமது மந்திரிகள் இச் சந்தர்ப்பத்தை நாட்டின் விடுதலைக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம். நாங்கள் ஒற்றுமையாக நின்று உழைத்தால் விடுதலையடையலாம். சுயாட்சிக்குப் புதிய அரசியல்திட்டம் முதற்படி என்றே எண்ணுகின்றேன்.

### இரண்டாவது சபையைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்!

இரண்டாவது சபை உயிரற்ற ஜடம் போன்றது. ஜனநாயகத்துக்கும் இரண்டாவது சபைக்கும் வெகுதூரம். என்றாலும் ஜனநாயக ஆட்சி நிலவும் நாடுகளில் இரண்டாவது சபைகளும் இழுபடுவதைக் காண்கின்றோம்! இலங்கை பெறப்போகும் இரண்டாவது சபைக்குப் பதினைந்து அங்கத்தவர்களை முதற்சபை தெரிவு செய்யும். மிகுதிப் பதினைந்து பேரையும் பிரதம மந்திரி நியமனஞ் செய்வார். இவர்கள் முட்டுக்கட்டை போடுவார்களானால் பழி முழுவதும் பிரதம மந்திரியையே சேரும். இரண்டாவது சபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினால் அதை ஒரு வருட காலம் வரை நடைமுறைக்கு வராமற் தடைசெய்யும் சக்தி முதற்சபைக்கு உண்டு. முதற்சபை புரட்சிகரமானதாக விருந்தால் - நல்லது, நாங்கள் மாற்றங்கள் வேண்டுமென வாதாடலாம்.

### புதிய அரசியல் திட்டத்தில் வகுப்புவாதிகளுக்கு இடமுண்டா?

இல்லவே இல்லை. வகுப்புவாதம் என்ற பேச்சுக்கே இனி இடமில்லை. குறித்த சில கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட அரசியற்கட்சிகள்தான் இனி வெற்றிகரமாக உழைக்க முடியும். கொம்யூனிஸ்ட் கட்சிகளைத் தவிர வேறு கட்சிகள் இப்போது இலங்கையில் இல்லை. சகல வகுப்பினரையுந் தன்னகத்தே கொண்ட ஒரு அரசியற் கட்சி நமது நாட்டிற் தோன்ற வேண்டும். சிங்களர் மட்டுமல்ல, ஏனைய வகுப்பினரும் அதிற் சேரவேண்டும். வகுப்புவாத முறைகளைப் பின்பற்றாது நாட்டு மக்கள் அனைவருக்கும் நன்மை பயக்கக்கூடிய திட்டங்களை வகுக்க வேண்டும். அவற்றில் வெற்றி காணவேண்டும். வெட்டு ஒன்றும் துண்டு இரண்டும் என்பது போற் கட்சியின் கொள்கைகள வழவழவென்று இராதுதெளிவாகவுந் திடமாகவு மிருக்க வேண்டும்.

**இதற்காக மக்களின் நம்**பிக்கையைப் பெற்ற சிலர் ஒன்று கூடி ஆலோசித்துத் தீர்க்கமான முடிவுகளைச் செய்தல் அவசியம். எவ்வித அரசியற் கொள்கைகளை அனுஷ்டிக்க வேண்டும்? நாட்டுக்கு ஏற்ற முறைகள் யாவை? என்பனபோன்ற விஷயங்களை நன்கு ஆராய்ந்த பின்னரே குறித்த கட்சிக்கென அபேட்சகர்களை நியமிக்க வேண்டும்.

கட்சியின் நோக்கங்களைக் கடைப்பிடித்துப் பயபக்தியுடன் ஒழுக வேண்டியது அக் கட்சியைச் சேர்வோரின் முக்கிய கடமை. தவிரத் தைரியத்துடன் தலைவரைப் பின்பற்றுந் தன்மையும் அவசியமாகின்றது. தலைவர்களாக வேண்டுமென்ற எண்ணம் நாட்டில் நிலவி வருகின்றது. மக்களும் அவர்களைப் பின்பற்றத் தயாராக விருக்கின்றனர். சிறந்த தலைவர்கள் இல்லாததே இப்போது உள்ள குறை.

### இலங்கை அரசாங்கத்தின் நிர்வாக முறைகள் ஏற்றனவா? தர்மமான வழியில் இருக்கின்றனவா?

இலங்கை அரசாங்கத்தின் சகல ஸ்தாபனங்களும் சீர்கேடாகவே நடைபெறுகின்றன. சர்வம் ஊழல் மயம். கைலஞ்சம் ஒரு தனிக்கலையாக அனுஷ்டிக்கப்படுகின்றது. பழுதடையாமற் சீரான நிலையிற் சேவை செய்யும் அரசாங்க அலுவற் கூடங்கள் இங்கு மருந்துக்குங் கிடையாது. சிலருடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியும் வேறு சிலரின் வாழ்க்கைத்தரத்தைக் குறைத்துமிருப்பதாற்தான் இச் சீர்கேடுகள் நிகழ்கின்றன.

### புதிய கணக்குப் பரிசோதனைப் பகுதித் தலைவர் நியமனம் பற்றித் தங்கள் கருத்தென்ன?

பிறநாட்டிலிருந்து உத்தியோகஸ்தரை இறக்குமதி செய்வதில்லையென இலங்கை பதின்மூன்று வருடங்களுக்கு முன்னரே தீர்மானித்து விட்டது. நாட்டுக்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களைப் - பயிற்ற வேண்டியது எங்கள் தலையாய கடமையாகும். இதில் நாடு பக்குவம் பெறவில்லையெனில், இத்தனைக்கும் மந்திரிமாரும் பொறுப்பு வாய்ந்த பிரதம உத்தியோகஸ்தர்களுமே குற்றவாளிகளாகின்றனர். குறித்த தீர்மானத்தைச் செம்மையான முறையில் அனுஷ்டிப்பதற்கு அவர்கள் வழிவகைகளைக் கையாளவில்லை. அத் தீர்மானத்தின் பொறுப்பையும் உன்னத நோக்கத்தையும் அவர்கள் இன்னும் உணரவில்லை. தவிர்க்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டாலன்றி வேறு எச் சந்தர்ப்பத்திலும் அந்நிய நாட்டிலிருந்து ஒருவரை அழைத்து அவரிடம் நிர்வாகப் பொறுப்பைத் தாரை வார்த்து விடுவது தர்மமாகாது. புதிய 'ஓடிற்றர் ஜெனறல்' நியமனத்தை எடுத்துக் கொள்ளுவோம். தேசாதிபதி, மந்திரிமார், பகிரங்கசேவை விசாரணைச்சபையினர், கணக்குப் பரிசோதனைப் பகுதியினர் யாவருஞ் சேர்ந்தே இச் சீர்கேட்டுக்குக் காரணர்களாக விருந்திருக்கின்றனர். உத்தியோக உயர்வு ஒருவரின் தகுதியைப் பொறுத்ததாக விருக்க வேண்டும். ஒருகாலம் தலைமைப் பதவியை ஏற்று நடத்தக்கூடிய சக்தி உண்டா என்பதை நன்றாக அறியவேண்டும். தகுதியும் நிர்வாகத் திறமையுமே உத்தியோக உயர்ச்சிக்கு உரை கல்லாக அமைய வேண்டும். வயது குறைந்த ஒருவர் திறமை வாய்ந்தவராகக் காணப்படின் அவருக்கே தலைமைப் பதவிக்கு உரிமை உண்டு. ஏற்ற உத்தியோகத்தர்களைப் பக்குவம்செய்து பயிற்சி கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் வேலை.

**உதாரணமாக இப்போது வித்தியாகந்தோரிற்** பதில் வித்தியா கர்த்தர் நியமனஞ் சம்பந்தமாக ஒரே இழுபறியாக இருக்கின்றது. குறித்த உத்தியோகத்தர் நிர்வாகப் பொறுப்பைக் கையேற்று நடத்துவாராவென்பதை ஒருவரும் ஆரம்பத்தில் ஆராயவில்லை; யோசிக்கவுமில்லை. அப்பதவிக்கு அவர் தகுதிவாய்ந்தவரோ என்பதைக் கவனியாது அவரைத் தூக்கி வைத்தபடியாற்தான் இத்தனை தொல்லைகளும் ஏற்பட்டுள்ளன. இதற்காகவே நான் அதிககால சேவையைக் கணித்து உத்தியோகத்தில் உயர்வு அளித்தல் தவறெனக் கூறுகின்றேன்.

எங்கள்கல்லூரிகளை மிகத் திறமையாகப்பரிபாலிக்கும் ஓர் அதிபரைத் தெரிந்து வித்தியாகந்தோரில் அவருக்கு நல்ல ஒரு பதவியைக் கொடுக்கலாம். பலதுறைகளிலும் பயிற்சிபெற்றபின் அவரையே வித்தியாகர்த்தராக நியமனஞ் செய்துவிடலாம். காட்டில் அப்பழுக்கற்ற விவேகம் படைத்த அநேக வாலிபர் இருக்கின்றனர். அவர்களை ஊக்கப்படுத்தி நல்ல பதவிகளைக் காலகதியில் வகிப்பார்கள் என்ற நம்பிக்கையை அவர்களுக்குக் கொடுப்போமானல் அரசாங்க நிர்வாகம் சீர்பெறும். ஒருவர் அதிககாலம் சேவை செய்த காரணத்தைக் கொண்டு அவரை உயர்ந்தபதவியிற் தூக்கி வைப்பது உகந்த முறையல்லவென்பது எனது தெளிவான கருத்து.

**எதற்காக ஸ்ரீ கனகரத்தி**னம் அவர்களைக் கணக்குப் பரிசோதனைப் பகுதித் தலைவராக நியமனஞ் செய்வதற்கு அரசாங்கம் தயங்கிற்றோ நான் அறியேன். அவர் அப்பதவிக்குத் தகுதி வாய்ந்தவர். விரும்பினால் அரசாங்கம் ஒரு வாலிபனை இங்கிலாந்துக்குப் பயிற்சிபெற அனுப்பலாம். ஸ்ரீ கனகரத்தினம் இளைப்பாறியதும் சீமைசென்று திரும்பியவரை அப்பதவிக்குப் பின்னர் நியமிக்கலாமல்லவா?

**கந்தவாலா** அறிக்கையைப் படித்துத் திருப்தியடைந்தவர்கள் ஸ்ரீ கனகரத்தினத்தை நிரந்தரமாக நியமனஞ் செய்யத் தவறிய காரணந் தெரியவில்லை.

புதிய கணக்குப்பரிசோதனைப் பகுதித் தலைவர் ஒருவரை ஆபிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்வதை அரசாங்கசபை ஆதரித்து விட்டது. இலங்கைக் கணக்குப் பரிசோதனைப் பகுதியில் வேலை பார்க்கும் எவரிடத்தும் நம்பிக்கையில்லை என்பதே இத்தீர்மானத்தின் கருத்து. இது எனது அழுத்தமான அபிப்பிராயம். இதனால் இலங்கையில் வதியும் அத்தனை பேரும் அவதூறு (It is a libel on the people of Ceylon) செய்யப்பட்டிருக்கின்றனர். அப்பதவிக்கு இங்கு ஒருவரும் அருகர் அல்லர் என்பதும் புலனாகின்றது. எனவே, இலங்கையில் உத்தியோகம் வகிக்கும் அனைவரின் (வெள்ளைக்கார உத்தியோகஸ்தர்களும் உட்பட) மானத்தையும் இது பாதிக்கின்றது.

இந் நிலையில் ஸ்ரீ குலரத்ன வேறும் பல விஷயங்களைப்பற்றிப் பேசினார். சிங்களர் பொதுவாகத் தமிழன் ஒருவர் அரசாங்க உத்தியோகப் பகுதிகளிற் தலைமை வகிப்பதைக்கண்டு பயப்படுகின்றனர். தங்களுக்குச் சந்தர்ப்பங்கள் இல்லாமற் போய்விடுமென அவர்கள் நினைக்கின்றனர். [தமிழர் அப்படிச் செய்திருக்கின்றனர். உதாரணமாகப் பகிரங்க வேலைப்பகுதியிலும் (P. W. D.) வேறும் பல காரியாலயங்களிலும் இப்போதும் அதிகமானோர் தமிழர்களே என்று ஈழகேசரிப் பிரதிநிதி தெரிவித்தார்.] நான் அநேக சந்தர்ப்பங்களிற் பல நியமனங்கள் செய்யும்போது சிங்களவர் அல்லாதவர்களுக்காக வாதாடியிருக்கின்றேன். முன்னர் செய்துகொண்ட வினைப்பயனாக ஐரோப்பா இப்போது அல்லலுறுகின்றது. 1938-ம் ஆண்டில் நான் பிரித்தானிய ஒலிபரப்பு ஸ்தாபனத்தில் (B. B. C.) ரேடியோப் பேச்சொன்று நிகழ்த்திய போது, இதே வார்த்தைகளையே குறிப்பிட்டேன். அதேபோலச் சிங்களரும் பாவஞ்செய்தால் அதற்காக அவர்கள் பிராயச்சித்தஞ் செய்ய நேரிடும் தனிப்பட்டவர்களுடன் தேசங்களும் வினைப்பயனாற் பாதிக்கப்படுகின்றன. சமீபத்தில் பெல்ஜியமும் இதை அனுபவித்தது. கர்மத்திலிருந்து ஒருவருந் தப்பிவிட முடியாது. ஊழ்வினைதான் எம்மை உலகில் வைத்து ஆட்டுகின்றது.

### இலவசக் கல்வியை ஆதரிக்கின்றீர்களா?

ஆமாம்: அன்புடன் ஆதரிக்கின்றேன். ஆனற் புதிய கல்வித் திட்டத்திற் கைத்தொழிற்பயிற்சி முக்கிய கவனம் பெறவேண்டும். யாழ்ப்பாணத்திற் கைத்தொழிற் கல்வி நிலையங்கள் அதிகம்பெருக வேண்டும். 'சீனியர்'சோதனையிற் சித்தியடையும் அநேக வாலிபருக்குக் கணக்குப்பதியவோ,'டைப்' அடிக்கவோ தெரியாது. சகல மாணவர்களும் பள்ளிக் கூடங்களிலே இத்துறைகளிற் தேர்ச்சி பெறுவதுமிகவும் அவசியமானது.

**இவ்வளவும் பேசிய ஸ்ரீ குல**ரத்ன சமூக சம்பந்தமாகவுஞ் சிலவற்றைத் தெரிவித்தார். இலங்கைப் பல்கலைக்கழகம் கிசு கிசு என்று வளரப் போகின்றது அப்போதெல்லாம் அங்கு 3000-க்கு அதிகமான ஆண்களும் பெண்களுஞ் சேர்ந்து கல்விபயில்வார்கள். புத்தம் புதிய கொள்கைகளும் சமூக ஒற்றுமையும் அங்கு முளைகொள்ளும். இதனற் சிங்களருந் தமிழரும் திருமணஞ் செய்து சீராக வாழ்வார்கள். இதை எவருந் தடுக்க முடியவே முடியாது. அவர்கள்தம் பெற்றோர்களின் பணத்தை ஒருபோதுங் கண்ணியப் படுத்த மாட்டார்கள். அவர்களையே அதைப் பத்திரமாக வைத்துக்கொள்ளும்படி சொல்லி விடுவார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் எனது உற்ற நண்பர்கள் தமிழர்தான். தமிழ் டொக்டர்மாருடனும் தமிழ்ச் சட்ட நிபுணர்களுடனுமே எனதுகாலம் கழிந்துகொண்டு வருகின்றது. ஆகவே எனது தமிழ்ச் சகோதரர்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகின்றேன். சிங்களவன் ஒருவன் கூறுகின்றான் என்று தவறாகக் கருதாதீர்கள். தமிழர் வெகு விரைவாகச் சிங்களம் பயில வேண்டும். அப்படிப் பயின்றாற்தான் தென் இலங்கையில் எந்தப் பகுதியிலுஞ் சென்று தமிழர் உத்தியோகம் பார்க்கலாம். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இதை ஏற்கனவே உணர்ந்திருப்பதைக் கண்டு மகிழ்கின்றேன். இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் அதிக வித்தியாசமில்லை. இந்து சமயந்தான் பௌத்த மதத்தையும் தந்திருக்கின்றது. எனவே நாங்கள் ஒருதாய் பிள்ளைகளைப் போல வாழ்ந்து மகிழ்ந்திருப்போம்.

# சிங்களர்-தமிழர் மணவாழ்வு?

# 3-வது உலக யுத்தம்

## அடுத்த மாதம் ஆரம்பமாகுமா?

மூன்றாவது உலக யுத்தம் வெகு சீக்கிரத்திலேயே ஏற்பட்டுவிடும்; அதுவும் ஒன்றிரண்டு மாதங்களில் ஏற்படும் என ஒரு வாஷிங்டன் பத்திரிகை எழுதியிருக்கிறது. இந்தச் செய்தியால் பிரிட்டிஷ் ராஜீய வட்டாரங்களில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

அப்பத்திரிகை கூறுவதாவது:

வாஷிங்டனில் உள்ள தீவிரவாதிகளின் ராஜீய வட்டாரங்களிலேயே இவ்வாறு 3-வது உலக யுத்தம் பற்றிப் பேசப்படுகிறது. ஏப்ரல் அல்லது மே மாதத்தில் ருஷியா துருக்கியைத் தாக்குமென்றும் அப்பொழுது துருக்கியின் உதவிக்காக பிரிட்டன் செல்லுமென்றும் இதன் மூலம் 3-வது உலக யுத்தமே ஏற்பட்டுவிடுமென்பதாகவும் இவ்வட்டாரங்களிற் பேசப்படுகின்றன.

ருஷிய-பிரிட்டிஷ் வேற்றுமைகள் வரவர அதிகரித்துக்கொண்டு வருவதைக் காணும் ராஜீய வட்டாரங்கள் மிகவும் கலவரப்படுகின்றன. இந்த வேற்றுமைகள் அதிகரிப்பதற்கு ஈரான் விவகாரமே முக்கிய காரணம். வடஈரானிலிருக்கும் துருப்புகளை ருஷியா கலைக்க மறுப்பதன் மூலம் மிக ஆபத்தான பாதையே ருஷியர் மேற்கொள்ளுகிறார்களென்று கூறப்படுகிறது. அதாவது மேல் நாடுகளுக்கும் ருஷியாவுக்கும்உண்டான விரோதம் வலுக்கத்தான் செய்யுமென இவர்கள் கூறுகின்றனர்.

ஜெனரல் டிகால் ருஷியாவுக்கும் அமெரிக்காவுக்கும் யுத்தம் மூளுமென்றும் இது தனது சொந்தக் கருத்து எனவும் சொல்லுகிறாராம்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்ண பரம்பரை

● கொண்டோடி ☼

● மிகவும் சுவாரஸ்யமான முறையில் இரு முதியவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

☼ 'பஸ்' வண்டியின் ஒரு மூலையில் 'தூங்கி'க்கொண்டிருந்த என்னை இவர்கள் சம்பாஷணையிலிருந்து கிளம்பிய சில வார்த்தைகள் 'விழிக்க'ச் செய்துவிட்டன.

☼ "'ஏடெடுத்தோன் எழுத்தறிவாளன்.' 'ஆணி பிடித்தோன் ஆழ்ந்த அறிவினன்'" என்றார் ஒருவர்.

☼ இவர்களது பேச்சில் இதுவரையும் காது கொடாதிருந்த எனக்கு இவ்வார்த்தைகள் அவர்களிடத்துக்கு என்னை இழுத்துவிட்டன.

☼ "ஆனல் இப்போது பார்த்தால்......" என்று ஆரம்பித்த மற்றவர், "'புத்தகம் எடுத்தோன் பித்தனானன்,' 'பேனை பிடித்தோன் பேயனானன்'" என்ற வார்த்தைகளைக் கக்கிவிட்டார்.

☼ இந்நிலைமையில் பஸ் வண்டி நின்றது; முதியவரிருவரும் இறங்கித் தொடர்ந்து பேசிக்கொண்டு சென்றனர்.

● விஷயத்தின் நடுக்கூற்றை மாத்திரம் கேட்ட எனக்கு இவர்கள் எவ்விஷயம்பற்றிச் சம்பாஷித்தார்கள் என்று உடனே ஊகிக்க முடியவில்லை.

☼ முற்கால அறிஞர்களதும், இக்காலப் படித்தவர்களதும் தாரதம்மியத்தைப் பற்றித்தான் சம்பாஷணை நடந்ததாக, அருகிலிருந்த ஆசிரியரொருவர், நான் ஊகித்துக்கொண்டதை, ஸ்திரப்படுத்தினர்.

☼ மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தமல்லவா? அவர்களின் வார்த்தைகள் முழுக்க, முழுக்க உண்மையென்றே சொல்லிவிடலாம்.

● ஆனல், அவர்கள் கூறிச் சென்ற உண்மை மொழிகளை இக்காலத்து நாம் தெரிந்துகொள்ளும் ஆற்றலை இழந்து அவற்றைத் திரித்து வழங்கக் கற்றுக்கொண்டுவிட்டோம்.

☼ 'பழையன கழிதலும் புதியன புகுதலும்......' என்று சூத்திரம் வரைந்து இலக்கணங் கற்பித்த முனிவரொருவருக்குப் புதிய இலக்கணங் கற்பிக்கின்றனர் ஒரு சிலர்.

☼ இச்சூத்திரத்தைக்கொண்டு தமிழைவேரோடுஅழித்துவிடுவார்கள்போலத் தோற்றுகின்றது.

☼ இன்னுஞ் சில காலத்தில் 'சந்தி'க்குழப்பங்கள் மாத்திரமல்ல ரகர, றகர; ழகர, ளகரப் பல்லுடைப்புகளும் ஒழிந்துவிடுமாம்.

☼ பேச்சுநடையில் தமிழை எழுதவும்வேண்டும், படிக்கவும் வேண்டும் என்று மறுமலர்ச்சி புரிபவர்கள் திணை, பால், எண், இடம் என்பவற்றில் மாட்டிக்கொண்டு 'தள்ளுமுள்ளு'ப்படவேண்டியும் இனி ஏற்படாதாம்.

☼ ஒருவர் பேசுகின்ற அல்லது எழுதுகின்ற தமிழ்ப்பாஷையை மற்றவர் 'புரிந்து' கொண்டாலே போதுமானதாம்.

● இம்மாதிரியான நிலைமைக்கு, கழுதைவால் போலத் தமிழ் வளர்ந்து வந்துவிட்டால், தமிழ் ஆசிரியர்கள் தராதலமுள்ளவர்களாகவோ பயிற்றப்பட்டவர்களாகவோ இருக்கவேண்டியதில்லையாம்.

☼ தமிழ் நெடுங்கணக்கு முழுவதையும் உச்சரிக்கவும், அவற்றைச் சேர்த்து வாசிக்கவும் மாணவர்களைப் பயிற்றிவிட்டால் ஆசிரியர்களின் தொல்லை நீங்கிவிடுமாம்.

☼ தாய்ப்பாஷைமூலம் கல்வி கற்பிக்கப்புகும் இக்காலத் தமிழ் ஆசிரியர்களுக்கு ஆங்கிலபாஷை கற்கவேண்டும் என்ற தொல்லையும் இருக்கின்றதாம்.

☼ வேலையற்ற ஆசிரியர்களின் தொகையும் வித்தியாபகுதியினரைத் திணறவடிக்கின்றதாம்.

☼ ஒருகாலத்தில் முன்னணியில் வைக்கப்பட்ட இவ்வாசிரியர்கள் புதியகல்வித் திட்டத்தின் போக்கில் பின்னணிக்கு வந்துவிட்டார்களாம்.

● ஆசிரிய உலகில் இப்பொழுது சிலகாலமாக ஒரு புதிய 'வாத'நோய் உண்டாகியிருக்கின்றதாம்.

☼ தமிழாசிரியர்களிடையேயும் வாதமா இருக்கும் என்று ஆச்சரியப்படவேண்டும்!

☼ இதற்குத்தான் 'பகுப்பு வாதம்' என்று பெயராம். இதனை மாகாண பாகிஸ்தான் என்றுஞ் சொல்லலாமாம்.

☼ கீழ்மாகாணத்து அரசாங்க சபைப் பிரதிநிதி யொருவரை இவ் 'வாதம்' உக்கிரமாக இப்பொழுது பிடித்துவிட்டதாம்.

☼ 'ஆசியா ஆசியர்க்கே' என்ற சுலோகத்தைஅனுவாக்கி 'மட்டக்களப்பு மட்டக்களப்பார்க்கே' என்று நிற்கின்றாராம்.

☼ இவருடைய பாணம் வடக்கு நோக்கித்தானும் கிளம்பியிருக்கிறது.

☼ வடக்கேயுள்ள ஆசிரியர் மீது பாணந் தொடுக்க முஸ்லீம் நியமன அங்கத்தவ ரொருவரும் இவருடன் கைகோத்து நிற்கின்றாராம்.

☼ வடபகுதி அரசாங்கசபைப் பிரதிநிதிகளே உசார்!

> இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங் களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.


## யாழ்ப்பாண வாசிகளுக்கு ஓர் விசேஷ செய்தி

தீராத நோய்களை எல்லாம் தீர்த்து இந்தியாவிலும் இலங்கையிலும் நற்புகழும் கீர்த்தியும் பெற்ற சிவானந்த சித்தர் வைத்தியசாலையின் பிரதம டாக்டரும் நாடிப் பரீக்ஷையின் நிபுணருமான V. K. S. செல்லப்பாபிள்ளை M. A. M. S. அவர்கள் அனேக நோயாளிகளின் வேண்டுகோளுக்கிணங்கி மார்ச் மாதம் 10-ந் திகதி துவக்கம் 30-ந் திகதி வரை யாழ்ப்பாணம் A. தம்பிமுத்து, பிரபல சுருட்டு வியாபாரி அவர்களின் பங்களாவில், நம்பர் 404 ஆஸ்பத்திரி ரோட் ஸ்டேஷன் ஜங்ஷன் யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் தங்கியிருப்பார்.

நீங்கள் அல்லது உங்களைச் சேர்ந்தவர்கள் வியாதி எதுவாயினுலும் சரி வேறு வைத்தியர்களிடம் மருந்துகள் எடுத்தும் ஊசிகளேற்றியும் குணப்படாமல் இருந்தாலும் சரி உத்திரவாத சிகிச்சை பெற உடனே இவருடன் கலந்தாலோசனை செய்யுங்கள். அஸ்மா என்னும் இருமல், இளைப்பு, மூளைச்சூடு, மூலவாய்வு, மூலமுளை, மூலத்தில் இரத்தம் வருவது, வாய்வு, வயிற்று வலி, குன்மம், காசம், நீரழிவு, ஏப்பம், கண்டமாலை, ஆருத புண்கள், பாண்டு, காமாலை, சோகை, இடுப்புவலி, பற்றுபடை, சொரி சிரங்கு, அண்டவாய்வு, வாதம், இருதயவியாதி இன்னும் அனேக நோய்களும்; பெண்களுக்கு உண்டாகிய சூதக வாய்வு, சூதக வயிற்றுவலி, குழந்தைகள் இல்லாமலிருத்தல், குழந்தைகளுக்கு ஏற்படும் கணை கிரந்தி, மார்புவலி இன்னும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல பிணிகளும் வெகு சீக்கிரத்தில் குணப்படுத்திக் கொடுக்கப்படும், இதுசமயத்தை இழந்துவிடாதீர்கள்,

### சிவானந்தசித்தர் வைத்தியசாலை

ஹெட் ஆபீஸ், 768, லோவர் வீதி, பதுளை.
பிராஞ்சு ஆபீஸ், 92, செட்டியார் தெரு, கொழும்பு.



## புகையிலைப்பயிர் செய்வோர்க்கு — ஓர் விசேஷ அறிவித்தல்

# புகையிலை

### கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனியார்

அநேக வருஷங்களாக எல்லாப் பயிர்களுக்கும் வேண்டிய பசளைவகைகளை விநியோகஞ் செய்பவர்களாக இருந்து வருகிருர்கள்.

புகையிலைப் பயிர்ச் செய்கைக்கு அவசியமான பசளைகளைப்பற்றி விசேஷமாக அறிந்தவர்கள்

# C. C. C.

பிரத்தியேக புகையிலைப் பசளைக் கலப்புகளை உபயோகிப்பதாலேயே சிறந்த செழிப்பையும் மிக உயர்ந்த லாபத்தையும் — பெறமுடியும் —

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்

### கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனி லிமிற்றெட்

(பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டது)
(அங்கத்தவர்களின் உத்தாரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது)

**COLOMBO COMMERCIAL CO., LTD.**

Incorporated in Great Britain.
Liability of Members Ltd.

[2653]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய அரங்கம்

# அவர் இருந்தால் . . . . .

### பண்டிதர் நா. கந்தையா

"தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு"

என்பது வள்ளுவப்பெருந்தகையாரின் வாக்கு. இவ்வமுத வாக்கில் எவ்வித உண்மைக் கருத்துச் செறிந்துள்ளதெனப் பாருங்கள்:

இன்று நம்நாட்டின் உணவு நிலை என்ன? "இவ்வாரந்தான் இறைவன் செயலால் ஒருபடி அரிசி பெற்றோம். அடுத்த வாரம் ஒன்றோ அரையோ அதுவும் இல்லையோ தெய்வந்தான் துணை. அரிசிக் கப்பலும் என்று வருமோ தெரியாது" என்று அடுத்த வாரத்தின், ஏன் அடுத்த நாளின் உணவு நிலையையே சமாளிக்க வழி தெரியாது ஏங்கிக் கொண்டு, பிற நாட்டை நோக்கி இருந்து 'கொட்டாவி' விடுகிறோம்; அரை வயிற்றுப் பட்டினியுடன் நெடுமூச்சு விடுகிறோம்; முடி தட்டிய ஒருபடிக்காக ஒருநாள் முழுவதையும் கடைவாசலிற்கழிக்கின்றோம். எத்தனையோ ஏழைமக்கள் கூட இருட்டுச் சந்தைக்குப் பெரும்பணம் இறைக்கிறார்கள். சந்தைக்காரரும் இதுதான் சமயமென்று தங்கள் உரொக்கப் பெட்டிகளைப் பெருப்பிக்கிறார்கள். இந்நிலையில் நமது நாடு பசி பட்டினியாலும் பிணியாலும் இடர்ப்படுகிறது.

இவ்வித குறைபாடுகள் ஒன்றுமின்றி நாடு நாடாக விளங்கவேண்டின் அது குறையாத விளைவைச் செய்யும் உழவரையும், சிறந்த பெரியோரையும், கெடுதல் இல்லாச் செல்வரையும் உடைத்தாக இருத்தல் அவசியம் என்பது வள்ளுவர் கருத்து. மூவருள்ளும் உழவரை முதற் குறிப்பிட்டிருக்கும் சிறப்பும் நோக்கற்பாலது. ஒன்றுக்கொன்று இன்றியமையாத தன்மை நோக்கி இம்முறைப்படி கூறினார்போலும். குறையாத விளைவு நாட்டில் இருப்பினன்றோ அறிவு நூல்களையோ கலை நூல்களையோ கசடறக் கற்றுத் தக்கோராதற்குக் காலமும் இடமும் உண்டாம். இங்ஙனம் தக்கோரானவரே நல்வழியிற் பொருளீட்டித் தாழ்விலாச் செல்வராகலாம்.

நாட்டின் நலனுக்கு உழவரிருந்தால் மாத்திரம் போதாது. அவர்கள் உழவுத் தொழிலை உயர்வுறச் செய்து தள்ளாவிளையுளைப் பெறுவதற்கு நீர்வளம் மிகவும் இன்றியமையாததே. "வரம்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோனுயரும்" என்ற ஔவையார் வாக்கும் இதனை வலியுறுத்துகின்றது. எந்த நாட்டுக்கும் நீர்வளம் இன்றியமையாததே. ஆறுகளின் வற்றா வளனும், குன்றாத மாரிவளனும் இருக்க வேண்டும். மாரி வறங்கூர்ந்த காலை, ஆற்று நீரும் ஊற்று நீரும் வளம்படுத்த வேண்டும். இவற்றையும் இன்றி வானத்தையே எதிர்பார்த்து வாழும் உலகு எங்ஙனம் என்றும் விளைவைப் பெற முடியும்? "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்றார். ஆற்றுவளம் இல்லாத நாட்டில் கிணறு குளங்களை ஆக்கி நீர்ப்பாசன வசதியைச் செய்தல் அந்நாட்டு அரசினரது தலையாய கடனாகும். இதனைப் பண்டைத் தமிழ்ப்புலவர் ஒருவர் அரசனுக்கு எடுத்து விளக்கும் திறனைப் பாருங்கள். புலவரின் தேசப் பற்றையும், பொதுநலப் பிரியத்தையும், உள்ளத் தூய்மையையும், உணர்வுத்திறனையும், கவித்துவப் பெருமையையும், அரசர்கள் புலவர் சொற்கேட்டு அவர் வழி ஒழுகிய உயர்வையும், அவர்மாட்டுக் கொண்டிருந்த பெருமையையும், உசாத் துணையையும், நம்பிக்கையையும் இப்பகுதி தெளிவாகக் காட்டுகிறது.

பாண்டியன் நெடுஞ்செழியனுக்குக் குடபுலவியனார் என்னும் புலவர் எடுத்து விளக்குகின்றார்:

"பெருமையிற் சிறந்த அரசனே! நீயோ, ஒலிக்கின்ற கடல் நாற்புறமுஞ் சூழ்ந்திருப்ப, பரந்து பட்டுக்கிடக்கும் அகன்ற நிலவுலகத்தைத் தமது அறநெறிகுன்றா மறம் மிகுந்த போர் முயற்சியால் அடிப்படுத்திக் கொண்டு, தாமே தனியாட்சி செலுத்தி, தம் புகழை நிலைநாட்டிச் சென்ற வலியோரது வழித்தோன்றினாய்! ஆதலின் நீயும் அன்னாரது புகழுக்குப் பழி ஏற்படாதவாறு நினது புகழ் திசை தொறும் நிற்க, தனியாட்சி செலுத்த வேண்டும். அங்ஙனம் மாற்றாரைப் புறங்கண்டு விறல் வேந்தனாய் விளங்குதலினாலே நினது ஆயுள், கோடி என்னும் எண்ணினைக் கடை எண்ணாக இருத்திய சங்கு முதலாய பேரெண்ணினை உடைத்தாகப் பெருக வேண்டும்" என்று இங்ஙனம் தனது ஆர்வந் தோன்றக் கூறுகின்றார். இவ்வாறு தனியாட்சி செலுத்திப் பல்லாண்டுவாழுதற்கு உனது நாடு உணவுப் பொருட்களாற் குறைவின்றிச் செல்வம்மிக்க நாடாதல் வேண்டும், அதற்குச் சிறந்த ஒரேவழி பயிரிடுதலைமேற்கொள்ளுதலே. இதற்குச் சாதகமாக உனது நாடு வளமுற அமைந்தது; ஆனால் இன்னும் நீ செய்யவேண்டியது ஒன்றுமாத்திரம் உள்ளது என்ற கருத்தை உட்கொண்டு, பின்பு நாட்டின் சிறப்பைக் கூறுகின்றார்.

"வலிமையான் மிக்க அரசனே! உனது நாடு வளப்பத்திற் குறைந்ததன்று; தண்ணீருக்குள்ளே தாழ்ந்து கிடக்கும் குறுகிய காஞ்சியினது பூக்களைத் தமக்கு உணவாகக் கவரும் வாளைமீன் இனத்தையும், நுண்ணிய ஆரல்மீன்களையும் பெரிய வரால்மீன்களையும், நிறம் பொருந்திய கெடிற்றினையும் கொண்ட அகழியையுடைய நாடன்றோ அது! தனக்குக் காவலாக வானளாவிய மதிலை உடைத்தாகஇருக்கின்றதே! இவ்வாறு வளம் மிக்கதும் தொன்றுதொட்டு வழிவழி உரிமையாக வந்த பழமையானதுமாய நாட்டுக்கல்லவா நீ அரசனாய் அமைந்தாய்; ஆதலின் உனக்கோர் குறைவுமில்லை.

"பெருமையிற் சிறந்த வேந்தே! இங்ஙனம் வளமுறவும் காவல் பொருந்தவும் அமைந்த நாட்டையுடைய அரசன் ஒருவனால் விரும்பப்படுவனவும் சில உளவாகலாம். இவ்வாறாக, நீயும் இனிமேற் செல்ல இருக்கும் மறுமையுலகத்தின்கண் அனுபவிக்கும் செல்வத்தை விரும்பினும், பகையரசரின் புயவலியைக் கெடுத்து வென்றி கொண்டு நீயே தனியாட்சி செய்ய விரும்பினும், இவற்றால் உனது புகழை உலகெங்கும் நிலைநிறுத்த விரும்பினும், இவ்விருப்பங்களை நிறைவேற்றத்தக்க ஒரு செயல் உண்டு. அதனை நீ உனது நாட்டுக்குச் செய்யின் இவை நிறைவெய்தும் என்பதில் ஐயமில்லை. அதனை இப்பொழுது கூறுகிறேன் கேள்:

"செழிய! உடம்புகளெல்லாம் நீரை இன்றியமையாதன. அன்றியும் உணவாலான பிண்டங்களே இவ்வுடம்புகள். ஆதலின் இவைகள் உண்டியை (உணவை) முதலாக (காரணமாக) உடையன. உடம்பிருந்தாற்றான் உயிர் இருக்கும். ஆகவே இவ்வுடம்புகளுக்கெல்லாம் உண்டி கொடுத்தோர் அவற்றுக்கு உயிர் கொடுத்தோராவர். அரசனே! இனி, உணவெனப் படுவது எது என்பாயாயின், அது நிலத்துடன் கூடிய நீரேயாம். ஏனெனின் நிலமும் நீரும் ஒன்றுபட்டாலல்லவா நமது உணவுப் பொருள்கள் விளைவுறும். ஆதலின் வேந்தே! நீரையும் நிலனையும் ஒன்று கூட்டினவர்கள், இவ்வுலகத்தில் உடம்பையும் உயிரையும் படைத்தவராவர். நீயும் இது செய்யின் செல்லுமுலகத்துச் செல்வத்தைப் பெறுவாய்!

"இன்னும்கேள் அரசனே! நெல் முதலியவற்றை வித்திட்டு மழையைப் பார்த்திருக்கும் புலங்கள் பரந்துபட்ட நிலத்தை உடைத்தாயினும், அது அந்த நாட்டை ஆளும் அரசனுக்குப் பயன்படாது. மாரி வறங்கூரினும், நீரைப் பாய்ச்சக்கூடிய நீர்நிலைகளையுடைத்தாய் வானோக்கவேண்டாத நன்புலன்களே பயன்படும். ஆதலால் அரசனே! இவ்வாறு நிலங்குழிந்தவிடத்தே குளங்களாக நீரைக் கட்டுப்படுத்தி வைத்தோர் (தட்டோர்), தாம் செல்லும் உலகத்துச் செல்வம் முதலிய மூன்றையும் இவ்வுலகத்திலே (இவண்) தமது பெயரோடு தளைத்தோர் (தட்டோர்) ஆவர். அவ்வாறு செய்யாதோர் (தள்ளாதோர்,) இவ்வுலகத்தில் (இவண்) தமது பெயரைத் தளையாதோர் (தள்ளாதோர்) ஆவர். அவர்கட்கு அறம், பொருள், இன்பமாய இம் மூன்றும் இல்லை.

ஆதலால் கொல்லும் போரையுடைய செழிய! நீ இகழாது இதனைக் கடைப்பிடித்து விரைந்து செய்வாயாக" என்று இங்ஙனம் அரசன் விரும்பும் வகையால், தர்க்க முறையாக விளக்கினார். இவரது நுண்ணறிவைப் பார்மின்!

தற்காலத்தில் அரசினரை ஒன்று செய்விக்க எத்தனை கூட்டங்கள் கூட்டவேண்டும். எத்தனை [illegible] பேட்டி காண வேண்டும். எத்தனை பேரை ஒருமுகப் படுத்த வேண்டும்.

"வித்தி வான் நோக்கும் புன்புலங்களை" யுடைய நம் யாழ்ப்பாண நாட்டில் பருவ மழையின்மையாலும், நீர்ப்பாசன வசதியின்மையாலும் இடுப்பு வலிக்க நீர் இறைத்துப் பார்த்தும் போதிய விளைவைப் பெறாத இது பொழுது இப்புலவர் இருந்திருந்தால்....

**செய்யுள்**

முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்து பட்ட வியன் ஞாலம்
தாளிற் றந்து தம்புகழ் நிறீஇ
ஒருதா மாகிய உரவோ ரும்பல்,
ஒன்றுபத்தடுக்கியகோடிகடையிரீஇய
பெருமைத் தாகநின் ஆயுள் தானே;
நீர்த்தாழ்ந்த குறுங்காஞ்சிப்
பூக்கதூஉ மினவாளை
நுண்ணாற் பருவரால்
குரூஉக்கெடிற்ற குண்டகழி
வானுட்கும் வடிநீண்மதில்
மல்லன் மூதூர் வய வேந்தே! [னும்
செல்லுமுலகத்துச் செல்வம்வேண்டி
ஞாலங் காவலர் தோள்வலி முருக்கி
ஒருநீ யாகல் வேண்டினுஞ் சிறந்த
நல்லிசைநிறுத்தல்வேண்டினுமற்றதன்
தகுதி கேளினி மிகுதி யாள
நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டிகொடுத்தோருயிர்கொடுத்தோ
உண்டி முதற்றே உணவின் [சே
உணவெனப் படுவது [பிண்டம்
நிலத்தோடு நீரே
நீரும் நிலனும் புணரி யோரீண்
டுடம்பு முயிரும் படைத்திசினோரே
வித்திவான்நோக்கும் புன்புலங்கண்ண
வைப்பிற்றாயினும்நண்ணியாளும் [கன்
இறைவன் றாட்குத வாதே யதனால்
அடுபோர்ச் செழிய விகழாது வல்லே
நிலனெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம இவட்டட் டோரே
தள்ளா தோரிவட் டள்ளா
தோரே.

குறிப்பு: முந்நீர் - கடல், தாள் - முயற்சி, உரவோர் - வலியோர், முருக்கி - கெடுத்து, புணரியோர் - சேர்த்தோர், வித்தி - விதைத்து, தட்டோர் - தனைசெய்தவர்; கட்டுப்படுத்தியவர்.

புறம்-கஅ.

# காதலிக்கு!

**கா. மு. ஷெரீப்**

ஆணழகா வாழ்க்கையிலே யாரும்நம்மைப் போலசுகம்
காணவில்லை பிரியோமினி உலகில்—இதைப்
பேணவேண்டும் நாமிருவர் மனதில்—என்று

பேசிஇன்பம் தந்தஉந்தன் பிரிவைஎண்ணி வாடும்மனம்
நேசிக்குமோ வேறொருவள் உடலை?—இதை
யோசிக்காமல் எழுதுவதோ மடமை—கர்ப்பம்


ஆனேனென்றாய் ஆசைகொண்டேன் ஆண்மகவுபிறக்குமென்று
"தேனேசேய் பிறந்திருக்கு சேமம்—எந்தன்
கோனே அது உங்களுக்கு" எனவும்—இன்பம்

போதையிலே தூக்கிஎன்னைப் போட்டவோலை எழுதிவிட்ட
பேதையேநீ கொள்வதேன் சந்தேகம்?—என்
மேதைமேலாவண நீஎன் தேகம்—"சும்மா

ஆசைபேசி மோசஞ்செய்யும் ஆண்குலத்தை நம்பே"னென்று
மீசையுள்ள ஆவணச்சொல்லனாய் போதும்—வாழ்வில்
ஓசையில்லை உன்பிரிவால் நாளும்

# குரு வாசகம்

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரின் 110-வது ஆண்டு விழா இம்மாதம் 5ந் திகதி தொடக்கம் உலகின் பலபாகங்களிலும் கொண்டாடப்படும். அத் தினத்திலே அவருடைய அருள் மொழிகளிற் சிலவற்றை அறிதல் நன்று. இவற்றை ஸ்ரீமத் நடராஜாநந்தர் மொழிபெயர்த்திருக்கின்றார். —ப. ர்.



### கடவுள்

கடவுள் மனிதரிடம் எவ்விதமிருக்கிறாரென்று உனக்குத் தெரியுமா? தனவந்தர்களுடைய வீட்டில் மகளிர் திரைமறைவில் இருப்பதைப் போலவே அவரிருக்கின்றார். அந்த மகளிர் எல்லோரையும் பார்க்க முடியும்; ஆனால் அவர்களை ஒருவரும் காண முடியாது. இவ்விதமே கடவுள் ஒவ்வொருவரிடமும அமர்ந்திருக்கிறார்.

* *

கடவுள் கற்பக தருவைப் போன்றவர். நீ அவரிடம் வேண்டுவது உனக்குக் கிடைக்கும். ஒவ்வொருவனும் தான்தான் வேண்டுவதைப் பெறலாம்.

* * *

ஈசுவரன் ரூபமுடையவன், ரூபமில்லாதவன் என்பது எப்படி என்று உனக்குத் தெரியுமா? ஈசுவரன் ரூபி, அரூபி என்று சொல்வது பனிக்கட்டியையும், தண்ணீரைப் பற்றியும் பேசுவது போலாம். தண்ணீர் உறைந்து பனிக்கட்டியானால் அதற்குஉருவம் உண்டாகின்றது. அதே பனிக்கட்டி நீராகக் கரையும்போது, உருவம் [illegible] கிறாய்? அது ஒரு குளத்தில் மிதந்துகொண்டிருக்கும் பாசியைப் போன்றது. வேண்டும்போது அப்பாசியை ஒதுக்கிவிடலாம்; ஆனால் (நாம் கையை எடுத்தவுடனே) அது மறுபடியும் அந்த இடத்தை மறைத்துக்கொள்ளும். அதைப் போலவே நீ சிந்தனை செய்து ஸத்சங்கம் சேரும்வரையும் (இவ்வுலகத்தைப் பற்றின) உண்மை விளங்கும். ஆனால் அவைகளை விட்டு நீங்கினவுடனே இம் மண்ணுலக ஆசைகள், மாயை என்னுந் திரையால் உண்மையைமறைத்துவிடும்.

* * *

பேய்பிடித்தவனுக்குத் தன்னை ஒரு பேய் பிடித்துக்கொண்டது என்ற அறிவு தோன்றினால் உடனே அந்தப் பேய் அவனை விட்டு விலகுகின்றது. அதைப்போல் மாயையென்னும் பேயால் பீடிக்கப்பட்ட ஜீவன் தானே மயக்குண்டிருப்பதாக அறிந்தவுடனே மாயையிலிருந்துவிடுபடுகிறான்.

* *

கலங்கியுள்ள நீரில் சந்திர சூரியர்களுடைய பிரதிபிம்பத்தைத் தெளிவாகக் காணமுடியாது. அதுபோல "நான்" "எனது" என்னும் மாயையால் கலங்கியிருக்கும் புத்தியிலும், ஈசுவரனுடைய அருட்பிரகாசத்தைச் சரியாய் உணரமுடியாது.

உலகனைத்தும் ஒளியைக் கொடுக்கும் சூரியனை நாம் காணமுடியாதபடி சிறு மேகமானது மறைக்கின்றது. அதுபோல, சர்வாந்தரியாமியும், சர்வசாக்ஷி பூதனுயும் விளங்கும் சச்சிதானந்தப் பரம்பொருளை நாம் பார்க்காதபடி துச்சமான மாயையாகிய திரை மறைக்கின்றது

### அவதார புருஷர்

பல்மரக் கட்டைகளைப் பிணைத்துச் செய்யப்பட்ட பெரியதெப்பம் ஒன்று, தன் மீது நூற்றுக் கணக்கான மக்களைச் சுமந்துகொண்டு நீரின்மேல் சென்றாலும் அமிழ்வதில்லை. ஆனால் ஒருமாத்தின் சிறு துண்டோ ஒரு காகம் தன்மேல் உட்கார்ந்தாலும் அமிழ்ந்துவிடும். அவதார புருஷர் முற்கூறிய தெப்பம்போன்றவர்; அவர்களுடைய கருணையால் நூற்றுக்கணக்கான மக்கள் முக்தியடைகின்றனர். ஒரு சித்தனோ மிகவும் சிரமத்துடன் தான் மாத்திரம் முக்தியடையமுடியும்.

* * *

நீராவி யந்திரம், போய்ச் சேரவேண்டிய இடத்துக்குப் போய்ச் சேருவதோடு தன் பின்னால் நீளமாய் இணைக்கப்பட்ட சுமைகள் நிறைந்த பல வண்டிகளையும் இழுத்துச் செல்கின்றது. அதுபோலவே அவதார புருஷர்கள் தாம் செல்லவேண்டிய இடத்தை அ

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழகேசரி

சுன்னுகம்: பாரத். மாசி உஎவ

## தொழிற் கல்வியின் அவசியம்

**யுத்தத்துக்குப்பின்**, இலங்கையின் முன்னேற்றத்தை இலக்காகக்கொண்டு, செய்து முடிக்கவேண்டிய அநேக திட்டங்களை அரசினர் வகுப்பதாக ஊக்கங்காட்டி வருகின்றனர். அவைகள் திட்டப்படி நிறைவேறின், இலங்கை அதியுன்னத நிலைமையை அடையுமென்பதில் ஐயமேயில்லை. நாட்டின் செல்வமும், மக்களின் வாழ்க்கையும் பெரிதும் விசாலமடையுமென்பதும் நிச்சயம். ஆனால், இவைகள் பேச்சளவோடும் எழுத்தளவோடும் நின்றுவிடுமோ என்று நாம் அஞ்சவேண்டியிருக்கின்றது. திட்டங்கள் நிறைவேறுதற்கு இன்றியமையாத சாதனங்கள் ஏற்படாக்கால், மற்றையனயாவும் நிர்ப்பிரயோசனமாகவே முடியும். நோக்கங்கள் விரிந்தும் செய்கையாற் சுருங்கியும் விஷயங்கள் செல்லின், நன்மை ஏற்படுவதெப்படி?

• இலங்கையில் தொழில் முறைக் கல்வியை விரும்பும் மாணவர்கட்குக் கற்றுக் கொடுக்கக்கூடிய சிறந்த கல்லூரிகள் கிடையாமை பெருங்குறையென்றே கூறவேண்டியிருக்கிறது. ஒரேயொரு கலாசாலையே இப்போது கொழும்பு நகரில் உளது. எல்லாவிதமான தொழில்கட்கும் உரிய கல்வியை அங்கே கற்பதென்பதும் இயலாத விஷயம். மேலும், உயர்ந்த தொழிற்கல்வியை எத்துறையிலாவது கற்பதற்கும் அங்கு வசதி கிடையாது. விஷயமிவ்வாறுக, இலங்கையில் தொழில்விருத்தியை அரசினர் நினைத்தபடி விரைந்து முன்னேறச் செய்வதென்பது எவ்வளவு கஷ்டமாகும்? எத்தொழிலை ஆரம்பித்தாலும் அதனை நடத்த நிபுணர்களையும் தொழில் வல்லார்களையும் வேற்று நாட்டிலிருந்து பெறவேண்டியதாகின்றது. சிற்சில போது பெருந்தொகைப் பணஞ் சம்பளமாகக் கொடுக்க முன்வந்தும அரசினர் அதற்கு இசைந்த பேர்வழியைத் தருவித்துக் கொள்வது பிராண சங்கடமாகின்றது. ஆகவே, அரசினர் இவ்விஷயத்தில் அளவுகடந்த ஊக்கங் காட்டவேண்டும்.

இந்தியாவிலும் மேலைத்தேச நாடுகளிலும் உயர்ந்த தொழில் முறைக் கல்வி சர்வகலாசாலை மூலமாகவே கற்றுக் கொடுக்கப் படுவதாகும். அப்படியே இலங்கைச் சர்வகலாசாலையும் செய்ய வேண்டும். அவ்விதமாக ஏற்படாவிடின், தொழில் நிபுணர்களை விரும்பியபடி பெறுவது கஷ்டமாகும். அப்போது பல்வேறு தொழில்கள் அபிவிருத்தியடைவதும் தாமதமடையும. இந்தியாவில் நாலு பக்கங்களிலும் தொழில முறை கற்றுக் கொடுககும் கலாசாலைகள் நூற்றுக்குமேல் இருக்கின்றன. அவைகளின் நன்மை காரணமாக எல்லாவித பொருட்களும் இந்தியாவில உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்திய மக்களின் தேவைக்கு இசையப் பொருட்கள் தயாரிக்கப்படாவிடினும ஓரளவுக்கு எல்லாப் பொருட்களும் அங்கு கிடைக்கின்றன எனபதை மறுக்க முடியாது. ஐரோப்பியபொருட்கள் வரத்துக் குன்றிய இச்சமயத்தில், இலங்கை வாசிகள் அநேகர் இந்தியா சென்று திரும்புவது இப் பொருட்களைப் பெறவேயாகும். ஒரு சில பொருட்களாவது இலங்கையில் தயாரிக்கப்படா திருப்பது எவ்வளவு நட்டமும அவமானமுமாகும்.

யுத்தம் ஆரம்பிக்க முன்வரே இந்தியாவில், எத்தனையோ தொழில் ஸ்தாபனங்கள் தோன்றிவிட்டன. இப்போது அவைகள் அடைந்துள்ள உன்னதநிலை மிகப் பிரதானமானதென்பது சொல்லவும் வேண்டுமா? பிரதானமாக இரும்புச்சாமான்கள், கடதாசி, யந்திரங்கள், பென்ஸில்கள், சீமேந்து, கண்ணுடிப்பொருட்கள், சாயங்கள், புடவைகள், என்பனவற்றை இந்தியாவில் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நூற்றுக் கணக்காகப் பெருகியிருக்கின்றனவே. இலங்கையில் இவைகளின்மையால் பொதுமக்கள் அடையும் சிரமம் எவ்வளவாகும்? மேலும் தொழிற்கல்வி கற்றுக் கொடுக்குங் கலாசாலைகள் இந்தியாவில் அநேகம் இருப்பதால் தொழிலை முறையே நடாத்தும் ஆற்றலும் தகுதியும் உடையோரும் அநேகருளர். இந்நிலையை இலங்கை என்று அடையுமோ? உத்தியோகக் கல்வி போய்த் தொழிற் கல்வியையே நம் மாணவர் விரும்பிக் கற்கும் காலம் விரைந்து வரவேண்டும். அப்பொழுதுதான் நாட்டின் முன்னேற்றத்துக்கு வழி காணலாம். ஆகவே, அரசினர் பல்வேறு தொழிற் கல்லூரிகளைப் பல் வேறிடங்களிலும் அமைத்து மாணவரை அத்துறையிற் பயிற்ற அடுத்து முயலல் அத்தியாவசியம.

சென்ற பதினைந்து வருடங்களாக இலங்கை மந்திரிமார்கள், இலங்கையின் செல்வ விருத்தியை நாடிப் பேச்சளவில் பரபரப் புடையராக இருந்தாரேயன்றி, அனுட்டானத்தில் எப்பெரிய காரியத்தையும் செய்து முடித்திலர். அப்படியே இன்னுமிருப்பதாயின், நம் நாட்டில் வறுமையும் பஞ்சமுந் தலைப்பட்டு, அளப்பருந் துயரில் யாவரையும் ஆழ்த்தி விடும். அரசாங்க உத்தியோகந்தான் பொருள் தேடுதற்கு ஏற்றதென எண்ணும் மனப்பான்மை, பொதுமக்கள் மனதினின்று நீங்க வேண்டும் தொழில் முறைகளைக் கைக்கொண்டே மேலைத்தேச நாடுகள் செல்வநிலையை அடைந்ததை நாம் நன்கு உணரவேண்டும். அரசினர் கல்வி முறையை விரைந்து மாற்றியமைத்தல் வேண்டும். எல்லோருக்கும் உயர்தரக் கல்வியைக் கற்றுக்கொடுப்பதிற் காலத்தைப் போக்கப்படாது அவரவர்தகுதிக்கும் ஆற்றலுக்கும் மனப்பான்மைக்கு மிசையத் தொழில்முறைக் கல்வியைக் கற்றுக் கொடுப்பதை இலக்காகக் கொள்ள வேண்டும். இதற்கு ஏற்ற முறையில் தொழிற்கல்வி கற்றுக் கொடுக்கும் கலாசாலைகளும் பல்வேறிடங்களிலும் நிறுவப்படல் வேண்டும் அப் பொழுது தான் நம்நாடு உண்மை வழியில் முன்னேற்றமடையும என எண்ண இடமுண்டு.

## ஒரு படி இறங்கினர்

### ஸ்ரீ ஜி. ஜியின் அரசியல்வேட்டு

"முற்போக்கான தேசியச் சிங்களருடன் இலங்கைத் தமிழர் ஒன்று சேர்ந்து பிறந்த நாட்டின் பூரண விடுதலைக்காக உழைக்க வேண்டும்" என அரசாங்கசபைப் பிரதிநிதி ஜி ஜி. பொன்னம்பலம் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் நிகழ்ந்த கூட்டத்தில் முழக்கியிருக்கின்றார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

புதியஅரசியற்திட்டம் சுதந்திர பாதையைநோக்கி மக்களை இழுத்துக் கொண்டு செல்வதாகத் தமிழர் கூறுகின்றனர் எனப் பிரிட்டன் பிரசாரஞ் செய்திருக்கின்றது. இம் மானபங்கத்தைத் தமிழ் மக்களாற் தாங்கமுடியாது. இதற்குத் தலையடி கொடுத்தே தீரவேண்டும். இத்துறையில் எமது வாலிபர்களே துணிந்து கருமமாற்ற வேண்டும்.

இதனுல் வெள்ளை அறிக்கைக்குப் பூரண ஆதரவு கொடுத்த தமிழர்களை நான் மன்னிக்கவில்லை. அவர்கள் கட்சியின் கொள்கைகளை யெல்லாம் மீறி விட்டனர். இம்மாதிரியான ஆரம்ப சீர்கேடுகளுடன் புதிய அரசியற்திட்டத்தைக் கையேற்று நடத்த முடியவே முடியாது.

## பாதை ஓரத்தில்

★

### பாட்டைசாரி

**இலங்கைப் புகையிரதங்**களிற் பிரயாணஞ் செய்வதென்றுல் இப்போது பரம சங்கடமாக விருக்கின்றது. யாழ்ப்பாணப்பக்கம் ஓடி ஆடித்திரியும் புகையிரதங்களைப்பற்றிப் பேச வேண்டியதே யில்லை. உக்கி இறந்துகொண்டிருக்கும் ஓட்டை 'எஞ்சின்' களும் 'படான்' பெட்டிகளுந்தான் வட இலங்கைப் பக்கம் நடமாடுகின்றன. ஏனைய பகுதிகளில் ஓட்டம் விசையாக இருந்த போதிலும் சௌகரியங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. யாழ்ப்பாணப்பக்கம் அனுப்பப்படும் மூன்றும் வகுப்புப் பெட்டிகள் வெறும் பாடாவாரிகள். சாயந்தரம் கொழும்பைவிட்டுப் புறப்படும் புகையிரதம் அடுத்தநாள் மத்தியானந்தான் காங்கேசன் துறையை ஒருமாதிரி 'முக்கி முனகிச்' சேருகின்றது. இவ் வண்டியிற் தொடுக்கப்பட்டிருக்கும் மூன்றும் வகுப்புப் பெட்டிகளிற் புகுந்தால் மலகூடத்துக்குள் நுழைவது போலவேயிருக்கும். அவ்வளவு பரிமள நாற்றம்! இரண்டாம் வகுப்புகளும் ஏறக்குறைய இப்படித்தான்.

### அள்ளு காசு

இந்த இலட்சணத்தில் இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதியின் லாப நஷ்டங்களையும் ஆராய்வோம். 1936 தொடக்கம் 1937 வரை செலவு ரூபா 20,355,043. உழைப்பு ரூபா 16,304,451. 1939 தொடக்கம் 1940 முடியச் செலவு ரூபா 21,157,355. வருமானம் ரூபா 17,107,451. ஆனுற் குள்ளனின் 'குண்டபிஷேகத்' துடன் இலங்கை 'ரயில்வே'க்கும் அடித்தது யோகம். 1942 தொடக்கம் 1943 முடிய ஏற்பட்ட செலவு ரூபா 28,880,703. கிடைத்த வருமானம் ரூபா 39,693,952. அடுத்த வருடத்திற் கிடைத்த லாபம் மட்டும் இரண்டு கோடி ரூபாய். 1945-ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை அள்ளுகாசும் தென்னம்பிள்ளையுமாகவே யிருக்கின்றது. இவ் வருடங்களுக்குமதிப்பிட்டிருக்குஞ்செலவு ரூபா 46,469,480. வருமான மதிப்பு ரூபா 52,450,000. வட்டிகுட்டியுடன் இலங்கைப் புகையிரதப்பகுதி பணத்தை வாரிக் கட்டிய போதிலும் மக்களின் சௌகரியத்தைப் பற்றிய யோசனை அணுவளவுமில்லை. யுத்த காலத்திற்தான் பல கஷ்டங்கள் என்றுல் யுத்தம் முடிந்தபின்னருமா இந்த இடியேறு?

### வஞ்சக வேலையா?

காங்கேசன்துறை வந்து சேரும் புகைவண்டிகள் நல்ல வருமானத்தைக் கொடுத்து வருகின்றன. புகையிரதப்பகுதிக்கு யாழ்ப்பாணப் பக்கத்தாற்தான் நல்ல வியாபாரம். அப்படியிருந்தபோதிலும் வட இலங்கையை நோக்கி ஓடும் வண்டிகள் சதா தண்டவாளத்திற்தான் போய்க்கொண்டிருக்கின்றன! இப்போது தண்டவாளங்களும் மாற்றப்பட்டு விட்டன. இனி வேறும் நல்ல மாற்றங்கள் செய்து புகையிரதப் பிரயாணத்தைக் கூடியளவு சௌகரியமாக்க வேண்டும். இது விஷயத்தில் அரசாங்கம் துரிதமாக முயற்சித்து நாட்டுமக்களின் நிர்ப்பந்தங்களைத் தீர்க்கவேண்டும்.

### சாராய நாதன்

சொக்கநாதன் திருவுருவத்தைக் கண்குளிரக் கண்டாலும் சாராய நாதனின் தரிசனம் அவ்வளவு இலேசிற் கிடைப்பதில்லை. பிரதி மாதமும் 'கியூ' வரிசையில் நின்றுற்தான் சார்ய நாதன் பளிங்கு மண்டபத்தில் பிரசன்னமாவார். கடந்தவாரம் இந்தப் பெருமானுக்கு வில்வம் சாத்தச் சென்ற யாழ்ப்பாணப் பட்டினப் பக்த கோடிகள் வரிசை முறையை அனுஷ்டியாது கோவிலை முற்றுக்கை செய்தனர். இதைக்கண்ட பண் [illegible] யும்படியும், கொழும்புமக்களைப் பின்பற்றிக் கௌரவமாக நடந்துகொள்ளுமாறுங் கேட்டுக் கொண்டார். எறும்புகள்கூட வரிசையாகச் செல்வதை அவர் உதாரணமாகக் காட்டிச் சாராயப் பக்தர்களுக்கு உபதேசஞ் செய்திருக்கின்றுர்.

கள்ள விலைக்கு விற்றுக் கொள்ளை லாபமடிக்கும் பேர்வழிகளையும் அவர் அறிவாராம். அப்படியாறுற் கையும் மெய்யுமாகப் பிடித்து நல்ல பாடம் படிப்பிப்பதை விடுத்து இப்படியெல்லாம் எதற்காக உச்சி வெயிலில் நின்று உபதேசஞ் செய்யவேண்டும்!

சாராயநாதன் தரிசனங்காண
ஓடிநட மனமே—விரைந்து
ஓடிநட மனமே.

### மந்திரிக்கு மங்களம்

இலவசக் கல்வித் திட்டத்தையும் தாய்மொழிமூலங் கல்வியூட்டும் முயற்சியையும் பாராட்டிக் குடியேற்றநாட்டு மந்திரி சீமையிலிருந்து ஒரு நிருபம் அனுப்பி யிருக்கின்றுர். இப் பாராட்டு மொழிகள் விரைவில் அரசாங்கப் பத்திரமாகப் பிரசுரம் செய்யப்படுமெனக் கல்வி மந்திரி மத்தியபாடசாலை ஒன்றைக் கொட்டாஞ்சேனையிற்திறந்துவைத்தபோதுகூறியிருக்கிறுர்.

சமீபத்தில் அம்பலாங்கொடையிற் பேசுங்கயில் டொக்டர் கன்னங்கரா பணக்காரக் கும்பல்மீதும் சில புதினப்பத்திரிகைகள்மீதும் பாணந்தொடுத்திருக்கிறுர். எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கின்றதோ யார் கண்டது.

### சேனநாயகாவுக்கு ஏச்சு

ஸ்ரீ தஹநாயகா காலியில் நின்று கொண்டு கொழும்பிலே குசாலாக வதியும் விவசாய மந்திரிக்குச் சரியான பேச்சுக் கொடுத்திருக்கின்றுர். கமக்காரனின் முதலாம் 'நம்பர்' எதிரி ஸ்ரீ சேனநாயகாவென அழுத்தந்திருத்தமாகத் தனது கருத்தை விளாசித்தள்ளிவிட்டார்.

### சுதந்திரம் வருகின்றது

இலங்கையில் அடிமைத்தளைகள் இறுகிக்கொண்டே போகின்றன. ஆனுல் இந்தியா சுதந்திரக் கோட்டையை நோக்கி விரைந்து சென்றுகொண்டிருக்கின்றது. காங்கிரஸ் தலைவர்கள் அதற்கான வீதியையுஞ் சமைத்துவருகின்றனர். இவ்வருடம் முடியமுன்னர் இந்தியா மக்கள் சுதந்திரத் தாண்டவத்தை கண்ணுற்கண்டு அனுபவிக்கப் போகின்றனர். அப்படியானுல் இலங்கைக்கும் விமோசனங் கிடைக்குமா? இலங்கையில் உள்ளவர்கள் சும்மா இருந்துகொண்டு சுதந்திரம் பெறப்போகின்றனர்!

### கலைஞர் தரிசனம்

கடந்த வாரம் மாதவ மேனன் தலைமையிற் 'பூர்வ பரிஷத்'—காவிய நடன சித்திரங்கள் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நிகழ்ந்தன. வட இந்திய நடனக்கலையை யாழ்ப்பாணத்து மக்கள் இதற்கு முன்னர் அனுபவிக்கவில்லை. தாகூரின் நடனகோஷ்டி இங்கு வந்தபோதிலும் அவர்களின் நடன நிகழ்ச்சிகள் ஒரு தனிரகம். தென் இந்தியப் பண்பாட்டில் ஊறியிருக்கும் அநேகருக்கு ஹரேன்கோஷ் நடன மணிகளின் சில நிகழ்ச்சிகள் புதியவோர் பாணியிற் சென்றுகொண்டிப்பது தோன்றியது.

அன்றைய நிகழ்ச்சிகளில் 'நாகசோடி' யின் நடனம் பொறிப்பறந்து கொண்டிருந்தது- மதுதலைக்கேறி மதிமயங்கிய நாகவேடுவனின் நர்த்தனம் அதி அற்புதமாகவிருந்தது.

"ஆகாயக்கற்பவன" என்ற நடனசித்திரம் உன்னதமுறையில் அமைந்திருந்தது. இதை வர்ணிப்பதற்கு வசந்தச் சிறகுகளில் இவர்ந்து காவியப் பூங்காவிற் புகுந்து பதுமப்பாசடையில் முல்லை அரும்பு தாங்கிப் பஞ்ச வர்ணங்களாற் சித்திரம் [illegible] வேண்டும். பின்னணிச் சங்கீதமும் 'பூர்வபரிஷத்' வெற்றிக்குக் காரணம்.

## எழுத்தாளர் இலட்சியம்

வே. சங்கரநாராயணன்

**எழுத்தாளர் எந்தச் சமூகத்**துக்காகத் தங்கள் அறிவையும் மூளையையும் திறனையும் சமர்ப்பிக்கிறுர்களோ அச்சமூகம் அவர்களைப் பராமரிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. இந்நிலைமையை—சமூகத்துக்காகத் தாங்கள் செய்யும் கடமையை—அச்சமூகம் உணரும்விதத்தில்எழுத்தாளர்கள் நடந்து கொள்ளவேண்டியதவசியமாகும். இந்த ஐக்கிய சக்திதான் எழுத்தாளர்களின் உண்மையான கொள்கையையும் இலட்சியத்தையும் நிரூபித்துக்காட்ட முடியும்.

'எழுத்தாளர்களுக்குக் கொள்கையே கிடையாது. எழுத்தை விலைக்கு விற்று வயிறு பிழைக்கும் ஒரு கூட்டம். எந்தக் கொள்கைக்காகவும் பேனுவை உபயோகப்படும்படி செய்வார்கள். இவர்களது சேவை உப்புச்சப்பற்ற தன்மையுள்ளது' என்னும் எண்ணம் சமூகத்தில் ஏற்படாமலிருக்கத் தங்கள் கொள்கையையும் இலட்சியத்தையும் அவர்களின் மொழிவளர்ச்சி, ஜனங்களின் அறிவு நிலைமை இவைகட்கேற்றுற் போல் பொதுமையடிப்படையில் வகுத்துக்கொள்வதுநலமாகும்.

சமூகம் என்பது மக்களேயாவர். இவர்கட்குரிய அரசியல் பொருளாதாரங்கள் எவ்விதம் இருக்கவேண்டுமென்பதை எழுத்தாளர்கள் ஒரேமுகமாகக் கூற முடியாமலிருப்பது உண்மையே. ஆகவே ஏகோபித்த அபிப்பிராயம் கொள்ள முடியாது. ஏனெனில், அடிமைப்பட்ட நாடுகளிலும் சுதந்திர நாடுகளிலும் ஒரே தன்மையான அரசியற் கொள்கைகளும் பொருளாதார அமைப்புகளும் இருந்து வரவில்லை. பலதரப்பட்ட கொள்கைகளால் இவ்விரு பிரச்சினைகளும் பிணைக்கப்பட்டிருக்கின்றன. சமூகமானது இப்பிணைப்பில் இணைக்கப்பட்டிருந்தாலும், மொழியைப் பொறுத்தவரை எழுத்தாளர்கள் ஒரே கொள்கையையும் இலட்சியத்தையும் தான் கொள்ள வேண்டுமென்று தோன்றுகிறது. இதில் அபிப்பிராயபேதம் குறுக்கிடத் தேவையில்லை. அரசியற் தலைமைகட்கு எழுத்தாளர்களின் கொள்கைகள் இவ்விதமிருந்தாற்றுன் ஓரளவாவது உதவுவதாக இருக்கும். எழுத்தாளர்களிடையே அரசியற் பொருளாதாரக் கொள்கை பேதத்தாலெழும் பிணக்குகள் சமூகத்துக்கும் தேசத்துக்கும் உதவியாக இருக்கப்போவதில்லை.

சாதி, மதம், நிறம், அரசியல், பொருளாதாரம் இவ் வைந்தும் எழுத்தாளர்களிடைப் பேதத்தையுண்டாக்கக் கூடா. மொழி ஒன்றுதான் அவர்களுடையதாக இருக்க முடியும். எம்மொழியும் அவர்களுடையதாக ஆகவேண்டுமென்பதிலும் அபிப்பிராயபேதமிருக்க முடியாது. எம்மொழியிலிருந்தாலும் தன்மொழி பேசுவோருக்கு அதைத் தர, அவைகளிலுள்ள சாரத்தைக் கொடுத்துதவ எழுத்தாளர்கள் கடமைப்பட்டிருக்கிறுர்கள்.

கலைகளைப்பற்றி எழுதி மனித வாழ்க்கையைச் சித்தரிப்பது ஒரு சிறந்த கலையாகவும் இக் கலைத்திறன், கருத்து, உபயோகம் முதலியவைகளை இலக்கியமாகக் கொண்ட உயர்ந்த கலையாகவும் விளங்கும் எழுத்துக்கலை எழுத்தாளர்களுக்காகவும், எழுத்தை விலைக்கு வாங்கி விற்கும் எழுத்து வியாபாரிகளுக்காகவும் உபயோகப் படவேண்டுமென்ற கொள்கை மிகவும் பிற்போக்கானதாகும். இவ்வேற்பாட்டால் இவ் விரு சாராருக்கும் எவ்வித பேதமற்ற தன்மையும் எற்படப்போவதில்லை.

எழுத்துவியாபாரிகள் கொழுக்க எவ்விதத் தடையுமில்லாத இக் கொள்கை ஒழிக்கப்படவேண்டும். இந்தக் கொள்கை இலட்சியமாக எழுத்தாளர்களிடம் இருந்து வருவது நன்மை தரப்போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமச்சீரமைப்பு

# கிராம முன்னேற்றம்

## சில முக்கிய குறிப்புகள்

எம். எஸ். சுந்தரேசுவரன், எம். ஏ. எல். டி

கிராம இயக்கம் அவசியமா, இயலுமா என்பவை பற்றிய சந்தேகங்களைவனத்தையுந் தீர்த்துவைப்பதற்கு ஸ்ரீ குமரப்பா இங்கு வருகின்றார். இந்நிலையில் கிராமச்சீரமைப்புச் சம்பந்தமான சில விஷயங்களை அறிவது சாலச் சிறந்தது. "கிராமச்சீரமைப்பு" என்ற நூலிலிருந்து இச் சிறு பகுதி எடுக்கப்பட்டது. 'நாஷனல் பப்ளிஷிங் கம்பெனி' இதை பிரசுரஞ் செய்திருக்கின்றது.

கிராம சமூக முன்னேற்ற முயற்சிகள் வெற்றிபெற வேண்டுமாயின், அம்முயற்சிகள் தம் நன்மைக்காக எடுக்கப் படுகின்றன என்பதைக் கிராம வாசிகள் உணர்ந்து, அவற்றில் விசேஷமான பங்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர்கள் முயற்சிகளில் கலந்துகொண்டு உழைக்காமல், வெளியிலிருப்பவர்கள் மாத்திரம் பாடுபடுவதனால், அவர்களின் பாடு முழுவதும் வீணாகவேதான் போகும். கிராமத்தாரே மேல்விழுந்து நிற்கும் சீர்திருத்தம் ஏற்படவேண்டுமாயின், கிராமவாசிகள் தம் தாழ்ந்த நிலைமையையும் அதன் காரணங்களையும் உணர்ந்துகொண்டு தாம் உயரவேண்டும் என்ற உறுதியுடன் உழைக்க வேண்டும். இதற்கு அவர்களைச் சூழ்ந்துள்ள அஞ்ஞானம் என்ற இருள் அகல வேண்டும். அரசியல், பொருளாதாரம், கலாசாரம், ஆன்மஞானம் ஆகிய பல துறைகளிலும் தாழ்ந்து நிற்கும் நம் கிராமங்கள் உயரவேண்டுமாயின், கல்வியும், அறிவும் பரவுவது மிகவும் அவசியம். அப்போதுதான் கிராமவாசிகள் உயர் நிலையை அடைய ஆவல்கொண்டு அதற்காக ஊக்கத்துடன் உழைப்பார்கள். எங்குக் கிராமச் சீர்திருத்தம் கிரமமாக ஏற்பட்டிருந்தாலும், அங்குக் கிராமப் பாடசாலை மூலகாரணமாய் இருந்திருப்பதை வெள்ளிடைமலையெனக் காணலாம். இதையேதான் ஸர் ஜார்ஜ் ஆண்டர்ஸன் என்பார் பின் வருமாறு கூறியுள்ளார்.

"கிராமங்களிலுள்ள விவசாயிகள் (கிராம சமூக முன்னேற்ற திட்டங்கள்) அவற்றின் நலனை அறிவதற்குவேண்டிய கல்வி அறிவு கூடியவர்கள் அல்லர்; அவற்றின் வளர்ச்சிக்கான யோசனைகளைச் சொல்லி நடத்தக் கூடிய உள்ளூர் ஊழியர்களும் கிடையாது. வெளிப்புறத்திலிருந்து அப்போதைக் கப்போது தொடர்பில்லாமல் எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றியைத் தரா; உட்புறத்திலிருந்தே பரவும் இயக்கந்தான் அவசியமானது. இத்தகைய இயக்கம் தோன்றிப்பரவ ஒரு சிறந்த கிராமக் கல்வித் திட்டம் இன்றியமையாததாகும்."

கிராமத்திலேயே வசித்துக் கொண்டு, கிராமத்தினருக்குப் பல துறைகளிலும் யோசனைகள் கூறி, அவர்களின் நன்மதிப்பைப் பெற்று விளங்குபவர் (அல்லது விளங்க வேண்டியவர்) கிராம ஆசிரியரே. ஆகவேதான், கிராம முன்னேற்ற இயக்கத்திற்கு ஆசிரியர் இன்றியமையாத் துணைபாவர் எனக் கருதப்படுகின்றனர். நம் கிராமங்கள் தற்காலம் இருக்கும் நிலைமையில் கிராம ஆசிரியரும், கிராமப் பாடசாலையும் முன்னேற்றச் சுடர்களாக விளங்கினால்தான் அவை உயர இயலும். ஆசிரியர், எதிர்காலப் பிரஜைகளாகிய குழந்தைகளுக்குச் சிறந்த கல்விப் பயிற்சி கொடுத்து, அவர்களைச் சீர்திருந்திய வழிகளில் பழக்கிப் போற்றத்தக்க நற் பழக்கங்களையும், மனப்பான்மைகளையும் அவர்களிடம் உண்டாக்கவேண்டும். இவர்கள் மூலமாக அவர்கள் பெற்றோர்களும் திருந்தக் கூடும். இவ்விரு வழிவகைகளிலும் கிராமப் பாடசாலைகள் அருந்தொண்டு ஆற்ற இயலும்; ஆற்றவும் வேண்டும். இதோடு முதியோர்களை நேர்முகமாகத் திருத்துவதற்கும் ஆசிரியர் பாடுபடவேண்டும். அவர்கள் நன்மைக்கான விஷயங்களை எடுத்து விளக்கி, அவர்களைத் திருந்திய வழிகளில் வாழச் செய்யவும் ஆசிரியர் முயற்சி எடுக்க வேண்டும். தவிர, கிராம முன்னேற்றத்திற்காக உழைக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் மற்றவர்களுக்கும் அவர் தம்மாலியன்ற உதவியைச் செய்து, கிராமத்தினரை அவர்கள் கூறும் வழியில் நடக்க உற்சாகப்படுத்தித் தூண்டவேண்டும். இக்காரணங்களாலேதான், கிராம சமூகப் பிரச்னைகள் யாவை? அவற்றை எவ்வனம் தீர்ப்பது? அதில் தாம் எடுத்துக்கொள்ள வேண்டிய பங்கென்ன? இவற்றையெல்லாம் நன்கறிந்து கொள்ளவேண்டுமென்றே, கிராமச் சீரமைப்பு என்ற பாடம் கட்டாயபாடமாகப் போதனாமுறைப் பாடசாலைகளின் பாட திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆரம்ப ஆசிரியர்கள் பரீட்சைக்கு வேண்டிய அளவுக்கு மாத்திரம் இப்பாடத்தைப் பாராட்டுவது போதாது. எதிர்காலத்தில் தாம் ஆற்றவிருக்கும் அருந்தொண்டை நினைவில் வைத்துக்கொண்டு, அதற்குவேண்டிய அறிவையும், பயிற்சியையும் போதனாமுறை பயிலுங்காலத்துப் பழுதற முழுதும் பெற்று வெளியேற வேண்டும். அப்போதுதான் அவர்கள் இந்தியத் தாய்க்கு ஆற்றவேண்டிய தங்கள் முதல் கடமையாகிய பணியைச் சிறக்கச் செய்ய இயலும்.

**கிராமச் சீரமைப்பு என்றால் என்ன?** — கிராமச் சீரமைப்பு என்பது சமூகம், கலாசாரம், பொருளாதாரம், சுகாதாரம், ஆரோக்கியம் ஆகிய பல துறைகளிலும் கிராம வாசிகளை முன்னடையச் செய்வதே ஆகும். இது பல திறப்பட்டிருப்பதால், இவற்றுள் ஒன்றை மாத்திரம் பாராட்டி மற்றவர்களைக் கவனியாது விடலாகாது. ஆகவே இப்பணியில் பல்வகை மனிதரும் ஈடுபட்டு உழைக்க வேண்டியது அவசியமாகும். ஆனால் முன்னேறவேண்டிய கிராமவாசியோ பாகுபாடு செய்வதற்கு இயலாத முழு மனிதனாயிருக்கிறான். அவனைப் பல துறைகளிலும் முன்னேறச் செய்யும் பொருட்டு உழைக்கும் தொண்டர்கள் பலரும் ஒன்றுபட்டு ஓரே முகமாகப் பாடுபடவேண்டும். இவர்கள் அனைவருக்கும் கிராம ஆசிரியர் ஒரு மையம்போல் விளங்கி, அவர்கள்முயற்சிகளை ஒன்றுபட்ட முயற்சியாக விளங்கச் செய்ய வேண்டும். இறுதியாக, முன் கூறியதுபோல் முன்னேற வேண்டிய கிராம வாசிகள் முன்னேற வேண்டும் என்ற ஊக்கங்கொண்டு தம் பொருட்டு எடுக்கப்படும் முயற்சிகள் அனைத்திலும் முதன்மையான பங்கெடுக்க வேண்டும். அப்போதுதான் நிலைத்து நிற்கக் கூடிய முன்னேற்றம் சாத்தியமாகும்.

**கிராம இயக்கத்தில் ஈடுபடுகிறவர்கள் கவனிக்க வேண்டியவை:—**

(1) கிராம முன்னேற்றத் தொண்டில் ஈடுபடுகிறவர்கள் அதில் உண்மையான நம்பிக்கையும், அக்கறையும் உள்ளவர்களாக இருக்கவேண்டும். அரசியல் போன்ற வேறு துறைகளில் லாபம்பெறும் நோக்கத்தோடு கலந்துகொள்வதுபோல், இவ்வேலையில் பெயரளவுக்கு ஈடுபடுவதில் சிறிதும் பயனில்லை.

(2) கிராமவாசிகளின் தற்கால நிலைமை யாது? அதைச் சீர்திருத்தச் செய்யவேண்டிய வேலைகள் யாவை? அவற்றை எவ்வாறு செய்யவேண்டும்? ஆகிய இவற்றைத் தெரிந்து கொள்வதோடு, அத்தொண்டை ஆற்றுவதற்கான பயிற்சியையும் பெற்றிருக்கவேண்டும்.

(3) கிராமத்திலேயே வசித்துக் கொண்டு, கிராம வாழ்க்கையை விரும்புகிறவராயும் இருக்க வேண்டும். நகரத்தில் வசித்துக் கொண்டு அப்போதைக்கப்போது கிராமங்களுக்குச் சென்று பிரசாரம்மாத்திரம் செய்பவரைக் கிராமவாசிகள் சுலபமாகப் பின்பற்றி நடக்கமாட்டார்கள்.

(4) முன்னேற்ற வாழ்க்கை யாது? என்பதைக் கிராமவாசிகள் சகவாசம் காரணமாய் அறிந்துகொண்டு அவ்விதமே வாழப் பழகக்கூடிய வகையில் தொண்டர் வாழவேண்டும். பிரசாரத்தைக் காட்டிலும் நிதர்சனமான வழிகளே கிராம வாசிகளின் வாழ்க்கை முறையை எளிதாக மாற்றவல்லவை.

(5) கிராம வாசிகளை அவமதித்து இகழாமல், அவர்கள்பால் அன்புகொண்டு, அவர்கள் தம்மை ஒரு சிறந்த நண்பராகவும், வழிகாட்டுபவராகவும் பாராட்டும் வகையில் நடந்துகொள்ளவேண்டும். இம் மனப்பான்மையே அவர்கள் மனத்தைக் கவரும்.

(6) பலன் தாமதமாகிறதென்றோ சிற்சில துறைகளில் தோல்வி காணப்படுகிறதென்றோ அதைரியமடைந்து, முயற்சியைக் கைவிடலாகாது.

# 3-வது உலக யுத்தம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ருஷியாவின் போக்கைக்கண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் அதிகங் கவலைப்படுகின்றது. பிரிட்டிஷ் மந்திரிசபையின் கூட்டம் ஒன்று நடந்ததாகவும் அக்கூட்டத்தில் ருஷியா ஈரானை விட்டு வெளியேற மறுப்பதைக் கண்டித்துப் பலத்த ஆட்சேபணை ஒன்று அனுப்புவதென முடிவாகியிருப்பதாகவும் தெரிகிறது. பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்குமிடையே ருஷியா பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. ருஷியாசம்பந்தமாகப்பிரிட்டிஷ் அரசாங்கம் எவ்வித முடிவும் இதுவரை செய்யவில்லை. மொஸ்கோவிலும் ஈரானிலும் இருக்கும் தனது ஸ்தானிகர்களின் அறிக்கைகளுக்காக பிரிட்டிஷ் அரசாங்கம் காத்திருக்கிறது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## 'டெய்லி மெயில்' சீற்றம்

பிரிட்டிஷ் கன்ஸர்வேட்டிவ் பத்திரிகையான 'டெய்லிமெயில்' கூறுவதாவது:—

நேசநாடுகளிடை பரஸ்பர நம்பிக்கையும் பாதுகாப்பும் இருக்க வேண்டுமென அனைவரும் விரும்புகிறார்கள். இந்த நம்பிக்கைக்குப் பலத்த அடியை கொடுப்பதுபோல, ருஷியாவட ஈரானில் துருப்புகளைக் கலைக்க மறுக்கிறது. இந்தப் போக்கை விட்டுவைக்கக் கூடாது. என்ன சமாதானத்தைக் கூறினாலும் சரி, ஒரு விஷயத்தை மறைக்க முடியாது. அதாவது ஈரானுடனும் பிரிட்டனுடனும் செய்த ஒப்பந்தத்தை ருஷியா மீறி விட்டது.

நேச ஸ்தாபனம் என்ன காரணத்துக்காக கூடினதோ அதையே ருஷியா மீறி விட்டது என்பதை மறுப்பது பைத்தியக்காரத்தனம். 1933-லிருந்து 39-ம் வருஷம் வரை ஹிட்லர் அனுஷ்டித்த போக்குமாதிரியே இன்றைய ருஷியாவின் போக்கும் இருக்கிறது. இன்று ஈரான் போனால் நாளை எந்தநாடு பலியாகும் என்ற கேள்விதான் பிறக்கும். ஆகவே பாதுகாப்புச் சபைக்கு இப் பிரேரணையைக் கொண்டுவரவேண்டும். சமரஸப் பேச்சு நடத்திப்பிரச்னையை தட்டிக் கழித்துவிடக் கூடாது.

## தமிழ்ப் பண்டிதர்களுக்கு விசேட சம்பளம்

தமிழ்ப் பண்டிதர்களுக்கு அளிக்கப்பட்டுவந்து, பின்பு சில காலமாக நிறுத்தப்பட்டிருந்த விசேட சம்பள உயர்ச்சிப்படி மீண்டும் அளிக்கப்படலாமென அறியலானோம்.

## திருமணம்

கற்பிட்டித் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர் திரு. வஸ்தியான் சிமியோன் பிள்ளைக்கும், திருமதி மேரி மாகிறேட் அம்மாளுக்கும் சென்ற 26-2-46 செவ்வாய்க்கிழமை சேனைக்குடியிருப்பு, அடைக்கலமாதாவின் தேவாலயத்தில் திருமணம் நடைபெற்றது. பெரியார்கள், உத்தியோகஸ்தர்கள் உட்பட அநேகர் சமூகம் அளித்திருந்தனர். புதுமணத் தம்பதிகள் வாழ்க.

# நமது வாசிகசாலை

'நமது வாசிகசாலையில் விமர்சனத்திற்கு நூல்கள் அனுப்புவோர் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும். மதிப்புரை விரும்புவோர் இதைக்கவனிப்பார்களாக.

**காந்திகாட்டும் பாதை:** 'ஹனுமன்' உதவி ஆசிரியர்: கே. எஸ். ஜம்புநாதன் தொகுத்தது. பக்கம்: 50. இருபதிப்பு. கைக் காகிதம். விலை: அணா எட்டு. மலிவுப்பதிப்பு அணா ஆறு. பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

காந்திஜி 1920-ம் ஆண்டு தொடக்கம் சுதந்திர இயக்கத்தின் தலைவராக இருந்துவருகின்றார். அவர் காங்கிரஸில் அங்கத்துவம் வகிக்காதவிடத்தும் காந்தியே காங்கிரஸ், காங்கிரஸே காந்தி என்பது முற்றும் உண்மை. இச்சிறு நூலில் காந்திஜியின் நிர்மாணத் திட்டங்கள் சில சுருக்கு சுருக்கென்று சுருக்கித் தரப்பட்டிருக்கின்றன. மாணவர்களும் படித்துப் பயன்பெறலாம்.

—இ. அ

**என். எஸ். கிருஷ்ணன்:** ஆசிரியர்: தோழர் வ. ரா. பக்கம்: 18. விலை: சதம் 25.

தமிழ்நாட்டுப் பெரியார்கள் என்றநூல் வ. ரா. எழுதினார். அதில் ஸ்ரீ கிருஷ்ணனும் இடம் பெற்றுள்ளார். அக் கட்டுரைதான் சின்னஞ்சிறு நூலாக வெளிவந்திருக்கின்றது. மனத் தடிப்பின்றி வ. ரா. அழகாக எழுதியிருக்கின்றார்.

**பெண் ஏன் அடிமையானாள்:** ஆசிரியர்: பெரியார் ஈ. வே. ராமசாமி. பக்கம்: 40. விலை: சதம் 25.

ஆணும் பெண்ணும் சமசுதந்திரத்துடன் வாழவேண்டும். அதற்குக் கற்பு என்ற தளையின் லட்சியமும் கொள்கையும் மாற்றப்படவேண்டும். வள்ளுவர் காட்டும் கற்புமுறை, காலத்துக்கும் தேசத்துக்கும் ஏற்றதன்று; விவாகம் இருவரின் வாழ்க்கை சௌகரியத்துக்கு ஒத்துவராவிடின் ரத்துச் செய்யப்படத் தக்கது. மறுமணம் தவறன்று. விபசாரக் குற்றம் இருபாலாருக்கும் சமமாய் இருக்க வேண்டும். பெற்றோர் சொத்திலும் பெண்கள் சமபங்கு பெறவேண்டும். கர்ப்பத்தடையும் வேண்டற்பாலது. என்னும் விடயங்களை இந்நூல் விளக்கிக் காட்டுகின்றது.

**இரணியன் அல்லது இணையற்ற வீரன்:** (ஓர் நாடகம்) ஆசிரியர்: பாரதிதாசன். பக்கம்: 96. விலை சதம் 95.

இரணியன் ஓர் தமிழ் மகன் என்றும் கஜகேது என்பான் ஆரியன் என்றும், இவ்விரு திறத்தாருக்கு முண்டான தகராற்றினால் தமிழ்நாட்டையும் தமிழரையும் முறியடித்து வெற்றிகொள்ளக் கருதிய கஜகேது தன்மகன் காங்கேயனின் உதவியுடன், மகள் சித்திரபானுவுக்கு வஞ்சகச் சூழ்ச்சியால் இரணியன் மகன் பிரகலாதனை இரகசியமாக மணஞ்செய்தானென்றும் பிரகலாதன் தான் முடிசூடும் பொழுது ஆரியரின் மாயவலையில் எடுபட்டு இரணிய நாமத்தை உச்சரிக்க மறுத்தான் என்றும், தூணில் இருந்து நரசிம்ம வடிவம் வெளிப்பட்டது பொய்யென்றும், காங்கேயனே சிங்கத் தோலைப் போர்த்து மறைந்து இருந்தானென்றும் இந்நாடகங் கூறுகின்றது. உண்மை எவ்வாறாயினும் நாடகப் போக்கும் சுவைபொருந்திய இனிய வசனங்களும், கவர்ச்சிகரமாக அமைந்திருக்கின்றன.

**ஜப்பானிய 'லாக்கப்பில்'** எழுதினங்கள். ஆசிரியர்: சி. வி. குப்புசாமி, பிரசுரம்: புதுமலர்ச்சி பிரசுராலயம், சிங்கப்பூர். விலை: வெள்ளி ஒன்று:

இந்நூல் யப்பானியரின் மிருக மனோபாவத்தை அவர்களது செயல்மூலம் சித்திரித்துக் காட்டுகின்றது. இதனை எழுதிய ஆசிரியரும் யப்பானியரால் கைது செய்யப்பட்டு ஏழு தினங்கள் காவல் முகாமில் வைக்கப்பட்டுப் பல துன்பங்களுக்குள்ளானவர். ஆதலின் உண்மை அனுபவங்களே எழுதப்பட்டுள்ளன. தன்னை அகப்படுத்திய தந்திரச்செயல் முதல் விடுதலை பெற்றது வரையுள்ள ஏழு நாள் வாழ்க்கைச் சம்பவங்களையும் அப்படியே வரைந்துள்ளார்.

—நா. க.

**கலைமலர்— மாதவெளியீடு:** பதிப்பாசிரியர்: கலைப்பித்தன் பிரசுரம்: கலைமலர் காரியாலயம், புதுக்கோட்டை (State) ஆண்டுச்சந்தா ரூ. 6-0-0; தனிப்பிரதி விலை: அணா 8.

தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் வழிகாட்டிப் பழம்பெருமையை மீண்டுந்தந்து தமிழ்த் தாய்க்குப் பணியாற்றும் குறிக்கோளுடன் இம்மலர் திங்கள் தோறும் மலருகின்றது. இதன் முதல் மலர் சுவாமி சுத்தானந்த பாரதியாரின் "அழகுத் தெய்வத்தை வாழ்த்தி வணங்குவோம்" என்னும் கீதத்துடன் ஆரம்பமாகி திரு. கு. மதுரை முதலியார், பெ. தூரன் முதலியோரின் கட்டுரைகளால் அழகுறுகின்றது. குறிக்கோளுடன் நில்லாது அதனை நிறைவேற்றத்தக்க பலதுறைக் கட்டுரைகளைச் சேர்த்தல் ஆசிரியர் கடனாகும். இது முதல்மலராதலின் குறைபாடுகள் இருப்பினும் வரும் மலர்கள் சிறப்புற மலருமென நம்பலாம்.

—நா. க.

**மாமரத் தோட்ட விற்பனை**

கொக்குவில் றெயில்வே பிளாற்பாரத்துக்கு வடகிழக்கில் (2 ஏக்கர்) 32 பரப்பு விஸ்தீரணமுள்ளதும், காய்க்கும் பருவமுள்ள 80-க்கு மேற்பட்ட உயர்ந்தசாதி ஒட்டுமா மரங்களும், மற்றும் பனை, தென்னைகளும், தனிக்கிணறும் கிழக்கில்றோட்டோரமாக வீடு கட்ட வசதியுமுள்ள தோட்டக்காணி விற்பனைக்கிருக்கின்றது. ரூபா 32,000 அல்லது கூடிய கேள்விக்குக் கொடுக்கப்படும். வேண்டுவோர் 31-3-46-க்கிடையில் மனேஜர், சோதிடப்பிரகாச பிறெஸ், கொக்குவில் P. O. என்ற விலாசத்துக்குஎழுதுக. [267 4—2]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல் 215

### புதிய புடவைக்கூப்பன் புத்தகம்.

1946-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் வழங்கப்பட்ட புடவைப் புஸ்தகங்களின் பின்வரும் கூப்பன்கள் 1946-ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ந் திகதி துவக்கம் புடவை கொள் முதல் செய்யத் தக்கதாக வலுவு பெறுகின்றன.

பெரியவர்கட்கான (சீனியர்) புஸ்தகத்தில் ஒரு புள்ளி பெறுமதியுள்ள S-7, S-10-ம் இலக்கங்களும், இரு அரைப்புள்ளிகள் பெறுமதியுள்ள 22-ம் இலக்கக்கூப்பனும்.

சிறுவர்கட்கான (ஜுனியர்) புஸ்தகத்தில் ஒரு புள்ளி பெறுமதியான J-10-ம் இலக்கமும், இரு அரைப்புள்ளிகள் பெறுமதியான 20-ம் இலக்கக் கூப்பனும் மேற்சொல்லப்பட்ட திகதி துவக்கம் வலுவுஅடைகின்றன.

ஈ. றெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி

கொழும்பு 1-3-1946
[2671]

## 216-ம் இலக்கப் புடவைக்கட்டுப்பாட்டு அறிவித்தல்

### புதிய புடவைக்கூப்பன் புத்தகம்— வியாபாரிகள் அறியவேண்டியன

புதிய புடவைக் கூப்பன் புஸ்தகத்தின் பக்கங்கள் நான்கு கரைகளிலும் நிழல் வீழ்த்தப்பட்டனவும், வெண்மையானவுமான குறுகிய கீலங்களையுடையன. இவ் ஓரத்தில் நீரடையாளம் தெள்ளிதில் தெரியும். விசேஷமாக வெண்மையான கீலத்தில் அவ் அடையாளம் தெரியும். ஆனபடியால் கூப்பனைப் புஸ்தகத்திலிருந்து வெட்டி எடுக்கும்போது கூப்பனின் அயலிலுள்ள ஓர பாகம் முற்றும் கடைசிவரையும் வெட்டப்பட வேண்டும். 'ரிசு'க் கடதாசியில் ஒட்டும்போது கூப்பனும் ஓரமும் ஒருங்கு தெரியவேண்டும். அவ்வாறு ஒட்டப்பட்டது மொத்த வியாபாரியிடம் அல்லது கூப்பன் வைப்பகத்தில் (Coupon bank) சேர்ப்பிக்கப்படும். இக்காரணத்தின் பொருட்டு வியாபாரிகட்குப் பின்வரும் விளக்க உரைகளைத் தருகிறோம்.

(1) கூப்பன் பெயருக்குடையவரின் பெயர் விலாசம் அரிசிப்புத்தக இலக்கம் அல்லது அடையாளக் காட் இலக்கம் உடையனவான மேலுறை (Cover) உள்ள புத்தகத்தைத் தான் வியாபாரிகள் ஏற்றுக்கொண்டு கூப்பன்களைத் தாங்களே வெட்டி எடுக்க வேண்டும்.

(2) புஸ்தகத்திலிருந்து கூப்பன்களை வெட்டி எடுக்குமுன் ஓரங்களில் தோன்றும் நீரடையாளத்தைப் பார்த்து வியாபாரி தெளிந்துகொள்ள வேண்டும். கூப்பனை அயலிலுள்ள நிழல் வீழ்ந்த, வெண்மையான கீலங்கள் உட்பட வெட்டி எடுக்கவேண்டும். ஓரம் இரு பக்கங்களை இணைக்குமிடங்களில் கூப்பன் இரு ஓரங்களின் அம் மாதிரிப்பாகங்களை வெட்டவேண்டும். மேல் ஓரம் அகலமான கீலமுடையதாய் "சீனியர்" அல்லது "யூனியர்" என்ற சொற்களை அச்சில் உடையது. மேற்பாகத்தேயுள்ள கூப்பன் வெட்டப் படும்போது மேற்சொல்லப்பட்ட அகலமான கீல பாகத்தையும் அதற்கு மேலேயுள்ள கரையையுங் கொண்டதாக வெட்டப்பட வேண்டும்.

(3) ஒரு பக்கத்தில் ஒரு கூப்பனுக்கு அதிகம் ஒரே தருணத்தில் எடுக்கப்பட நேர்ந்தால் அதை ஒரு துண்டாக வெட்டி ஒரு துண்டாகவே 'ரிசுக்' கடதாசியில் ஒட்ட வேண்டும்.

(4) அவ்வாறு வெட்டி எடுக்கப்பட்ட கூப்பன்களின் ஓரங்கள் பழுதில்லாமல் 'ரிசுக்' கடதாசியில் அக்கூப்பன்களை ஒட்டவேண்டும். அவ்வாறு ஒட்டும்போது கூப்பனின் எப்பாகமாவது, அச்சான பாகமாயினுஞ்சரி, ஓரமாயினுஞ்சரி ஒன்றிலிருந்து ஏற்றத்தாழ்வா யிருக்கக்கூடாது.


மொத்த வியாபாரிகள் கூப்பனுக்குரிய ஓரங்கள் பொருந்தியிராத கூப்பன்களை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என இத்தால் அதிகாரம் பெறுகின்றனர். கூப்பன் வைப்பகம் ஓரங்கள் பொருந்தியிராத கூப்பன்களை ஏற்கமாட்டாது.

(5) வியாபாரிகள் ஒட்டுவதற்குப் பல்வகையான தடிப்புள்ள 'ரிசுக்' கடதாசிகளைப் பயன்படுத்துவது காணப்படுகிறது. இனிமேல் புடவைக் கட்டுப்பாட்டுப் பகுதி கொடுக்கின்ற 'ரிசுக்' கடதாசி போன்ற உயர்ந்தவகையான ஒரேயளவான தடிப்புள்ள கடதாசியில் ஒட்டும்படி வியாபாரிகள் கேட்கப்படுகிறார்கள்.

(6) ஒரு புள்ளிக் கூப்பனும் அரைப்புள்ளிக் கூப்பனும் ஒரே 'ரிசு'க் கடதாசியில் ஒட்டப்படுதல் கூடாது. அவை வெவ்வேறு கடதாசிகளில் ஒட்டப்படவேண்டும். ஒரு முழுக்கடதாசி 100 அரைப்புள்ளிகளையோ அல்லது 100 முழுப்புள்ளிகளையோ கொண்டிருக்கும். அவ்வகையான முழுக் கடதாசிகள்தான் கூப்பன் வைப்பகத்தில் சேர்ப்பிக்கப்படவேண்டும்.

(7) தற்போது நடைமுறையில் இருப்பனவாய் மேற்சொல்லப்பட்ட பந்திகட்கு முரண்படாத கூப்பன் சிட்டுகளை அமைத்தல், சேர்ப்பித்தல் சம்பந்தமான விதிகள் தொடர்ந்து அனுஷ்டிக்கப்படவேண்டும்.

(8) கூப்பன் வெட்டப்பட்டு 'ரிசு'க் கடதாசியில் ஒட்டப்பட்டபின் இவ்வாறு தோன்றும்.




கொழும்பு 4-3-1946

ஈ. றெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
[2672]

## கொடியின் தத்துவம்

தேசியக்கொடி சம்பந்தமான பேச்சுகள் இப்போது இலங்கையில் எழுந்துள்ளன, இந்நிலையிற் கொடியின் மகத்தான இலட்சியத்தைப்பற்றிச் சிறிதளவு தெரிந்துகொள்வது நல்லது. சமீபத்திற் சின்னமனூரில் நிகழ்ந்த தமிழ்த்தொண்டர் மகாநாட்டிற் 'பிரசண்ட விகடன்' ஆசிரியர் ஸ்ரீ நாரணதுரைக்கண்ணன் நிகழ்த்திய சொற்பொழிவு இது.

**கொடி** ஒரு மகத்தான லட்சியத்தைக் குறிப்பது; ஒரு உன்னத லட்சியத்துக்குச் சின்னமாக விளங்குவது. ஜனசமுதாயத்தின் நிலைமையும், கலை நாகரிகத்தின் உயர்வையும், நாட்டின் பெருமையையும் வீரத்தையும் குறிப்பது கொடியே. தாங்கள் கொண்ட லட்சியத்தின், கொள்கையின் அடையாளமாகவே ஒவ்வொரு அரசாங்கமும் அரசியல் கட்சியும், சமுதாயமும், சங்கமும் கொடியொன்றை வைத்திருக்கிறது. ரஷியாவுக்கு ஜார் காலத்தில் ஒருகொடி இருந்தது: உழவனும் தொழிலாளியும் கொண்ட சோவியத் அரசாங்கத்தின் தற்காலக்கொடி அரிவாளும் கத்தியும்கொண்ட செங்கொடியாக விளங்குகிறது. கெய்ஸர் காலத்துக்குப்பிறகு, ஜெர்மனிக்கு ஹிட்லர் ஏற்படுத்திய கொடி ஸ்வஸ்திக்கொடி என்பது உங்களுக்குத் தெரியும். சூர்யவம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்ற வம்சப் பெருமையைத் தெரிவிக்க ஜப்பானியர் தங்கள் கொடியில் சூரியனைப் பொறித்திருக்கிறார்கள்; உலக முழுவதும் சாம்ராஜ்யங்களையுடைய பிரிட்டனுக்கு யூனியன் ஜாக்கொடி; இது பிரிட்டிஷ் மக்கள், 'எங்கள் ஐக்கியத்தினால் உலக முழுவதும் நாங்கள் சாம்ராஜ்யத்தைப் பரவச் செய்திருக்கிறோம்' என்று தெரிவிப்பதாகும். இது போன்றே அமெரிக்கா முதலிய பல தேசங்களுக்கும் ஒவ்வொரு கொடி இருக்கிறது.

பாரத தேசத்துக்கு என்ன கொடி இருக்கிறது? இந்தியா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருப்பதால், அரசாங்கமுறையில் யூனியன் ஜாக்கே இங்கும் பறக்கவிடப்படுகிறது. ஆனால், நம் நாட்டின் அடிமைத்தனத்தைப் போக்கச் சுதந்திரப் போராட்டம் நடத்தி வரும் காங்கிரஸ் மகாசபை தேசியக் கொடியாக, சிவப்பு, பச்சை, வெள்ளை ஆகிய 'மூவர்ணக்கொடி'யைப் பறக்கவிட்டு வருகிறது. தமிழர்களாகிய நமக்குப் பாரத தேசம் என்ற பொதுநோக்கில் மூவர்ணக்கொடி தேசீயக்கொடியாக இருந்தாலும், தமிழ்நாட்டுக்கெனத் தனியாக ஒருகொடி இருக்கிறது. அது தான் தமிழ்த்தாயின் தமிழ்க்கொடி! வில், புலி, மீன் ஆகிய மூன்று சின்னங்களைக் கொண்டது தமிழ்க்கொடி. இத் தமிழ்க்கொடியில் பொறிக்கப்பட்டுள்ள மூன்று சின்னங்களும் நம் தமிழ்நாட்டின் பெருமையை, தமிழ் மக்களின் வீரத்தை, கலைநாகரீக உயர்வை வெளிப்படுத்துவனவாயிருக்கின்றன.

**நம் தமிழ்நாட்டை** நீண்டகாலமாக அரசாண்டு வந்த பெருமன்னர் சேர, சோழ, பாண்டியர்களாவார். அப்பெருமன்னர்களின் ஆளுகைக்குட்பட்டோ பல குறுநில மன்னர்கள் தமிழ்நாட்டின் பல பாகங்களை அரசாண்டு வந்தார்கள். சேர, சோழ, பாண்டியர்களின் வீர பராக்கிரமங்களும், அவர்கள் புரிந்த அரிய பெரிய காரியங்களும் உலகப் பிரசித்தமானவை. அவர்கள் காலத்தில் தமிழர் சமுதாயத்தின் பெருமை உலகமெங்கணும் பரவியிருந்தது. தமிழ்க்கலை நாகரிகங்கள் உலகிலேயே ஒப்புயர்வற்று விளங்கியது. பாபிலோனியா, ரோமாபுரி, கிரீஸ், எகிப்து முதலிய நாடுகள் கலை நாகரிகங்களில் சிறந்து விளங்குவதற்கு முன்பே தமிழர்களுடைய கலை நாகரிகங்கள் தலைசிறந்து விளங்கியிருந்தன. கிறிஸ்து பிறப்பதற்கு இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னமே, தமிழ்நாடு ரோமாபுரி, கிரீஸ் பாபிலோன் முதலிய நாடுகளுடன் வாணிபஞ் செய்தது. தமிழர்கள் முத்து, பவளம் ஏலம் முதலிய பொருள்களைக் கப்பல் (நாவாய்)களில் ஏற்றிச் சென்று மேல்நாடுகளில் இறக்குமதி செய்தார்கள் அங்குள்ள வாசனைத் திரவியங்கள் முதலியவைகளை நம் நாட்டுக்குக் கொண்டுவந்து இறக்குமதி செய்தார்கள். தமிழ் நாட்டில் இன்று பல பாகங்களில் உள்ள துறைமுகங்களே, தமிழனுடைய பண்டைய வாணிபச் சிறப்பையும், ஆட்சி முறையின் பெருமையையும் விளக்கப் போதிய சான்றாகும். தமிழ் அரசர்கள் வடநாட்டு மன்னர்களைப் போரில் வென்று இமயமலை யுச்சியில் தங்கள் கொடியைப் பறக்க விட்டார்கள். இத்தகைய நம் மூவேந்தர் பெருமையையும் நாட்டின் பழம் பெருமையையும் உயர்வையும் விளக்கி நினைவுபடுத்துவதுதான் வில், புலி, மீன் சின்னங்களைக்கொண்ட தமிழ்க்கொடியாகும். இத் தமிழ்க்கொடியை என்றென்றும் நமக்குரிய நம் நாட்டுக்குரிய கொடியாகக் கொண்டு பறக்கவிடுவது நமக்குப் பெருமை தருவதாகும். நமக்குப் பெருமையை யளிக்கும் இதே தமிழ்க்கொடிதான் நாம் இன்றுள்ள கேவல நிலையையும் நினைவூட்டக் கூடியதாயிருக்கிறது. பாரதி சொல்வதுபோல்,

"பாமரராய் பான்மைகெட்டு,
ஊமையராய், குருடர்களாய்
செவிடர்களாய்"

நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடும் நிலையை நினைந்து நாணமடையச் செய்கிறது. ஒரு காலத்தில் உலகிலேயே மிக உன்னத நிலையில் இருந்த தமிழன் இன்று கேவலம் அடிமையென்ற பெயரோடு உயிர் வாழ்ந்து வருகிறான் என்றால் அது எவ்வளவு வெட்கக்கேடான விஷயம்.

**எங்கள்** தமிழ்நாடு பழம் பெருமைவாய்ந்தது. எங்கள் தமிழ்ச் சமுகம் கலை நாகரிகங்களில் தலை சிறந்து விளங்கியிருந்தது எங்கள் தமிழ்மொழி உலகிலேயே ஒப்புயர்வற்ற மொழி என்றெல்லாம் நாம் பழம் பெருமைபேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. இன்று நாம் மற்ற நாட்டுமக்களைப்போல, உன்னத நிலையை அடைவதற்கு முயலவேண்டும். எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓடச் செய்து, இமயத்தில் தங்கள் கொடிகளைப் பொறித்த அவ்வளவு வீரப் பராக்கிரமம் மிகுந்த மூவேந்தர்களின் வம்ச பரமபரை பூண்டற்றுப் போனதற்குக் காரணமென்ன? சேரசோழபாண்டியர்கள் ஆண்டு வந்த தமிழ் நாட்டில் பின்னால் அன்னியர்களான பல்லவ அரசர்களும், மராட்டி மன்னர்களும், தெலுங்கு ராஜாக்களும், ஆட்சி செலுத்தி வந்ததற்குக் காரணமென்ன? சேர, சோழ, பாண்டிய மன்னர்களிடையே இருந்த நல்லுறவும், ஒற்றுமையும் கெட்டொழிந்து போனதுதான். அவர்கள் ஒருவருக்கொருவர் வேற்றுமை கொண்டு, பகைமை பாராட்டிப் போரும் பூசலும் நடத்தியதுதான் அன்னியர்கள் தமிழ் நாட்டுக்குள் புகுந்து அரசாட்சி செய்வதற்கு முக்கிய காரணமாயிற்று.

தமிழ் மூவேந்தர்களைப் போலவே, நாமும் இன்று ஒற்றுமையும் சகோதரப் பான்மையும் இல்லாதிருந்து வருவதாற்றான் ஆங்கிலேயனுக்கும் வட நாட்டானுக்கும் பலவகையிலும் அடிமைப்பட்டுக் கெட்டொழிந்து கேவல நிலையில் இருந்து வருகிறோம். இவ்விழிவு நீங்கவேண்டுமானால்தமிழர்களாகிய நம்முள்ளே தற்போது இருந்துவரும் அரசியல் வேற்றுமை, சமய (மத) வேற்றுமை, அர்த்தமற்ற சாதி வேற்றுமை ஆகியவைகளை மறந்து, எல்லோரும் தமிழ்த்தாய் வயிற்றிற் பிறந்த ஒரே மக்கள், ஒரே சகோதரர்கள் என்று எண்ணங்கொண்டு ஒன்றுபட வேண்டும்; தமிழ்க்குலம், தமிழ் இனம், தமிழர் சமுதாயம்

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஏழையின் கொடை

**மயில்வாகனன்**

முருகையன் கோவிலில் அன்று பூஜை. முக்கியமாக நின்று நடத்தியவர் நல்லையா. "வெயிற்காலம்; சுவாமிக்கு அபிஷேகஞ் சிறப்பாக நடத்தினுல் மழைவரும்; நோய்கள் வரமாட்டா" என்று வீடு வீடாகச் சொல்லி ஏற்படுத்திய பூஜை. அதன்பின் ஊரிலுள்ள வேறு சிலரும் அவருடன் சேர்ந்து கொண்டு அன்றைக்குக் கோயிலிலே சோறவித்து எல்லாருக்கும் கொடுக்கவேண்டும் என்று தீர்மானித்தார்கள். அதன்படி, ஒவ்வொரு வீட்டாரிடமும் அரைப்படி அரிசிக்குக் குறையாமல் வாங்குவதெனத் திட்டம் போடப்பட்டது.

அன்றுகாலை இருவர், கையிற் சாக்குடன் ஒவ்வொரு வீட்டிற்கும் போய் அரிசி வாங்கினுர்கள். சிலர் ஒருபடி கொடுத்தார்கள்; சிலர் இரண்டுபடி கொடுத்தார்கள். சாக்கும் வரவர ஊதத் தொடங்கியது. சாக்கைச் சுமந்து கொண்டு சென்ருன் சொக்கன். முன்னே நடந்தவன் அருளம்பலம். "அடே சொக்கா! அதோ பார். வாசலில் இராசலிங்கம் நிற்கிருர். அவரிடம் போவோமா" என்ருன் அருளம்பலம். சொக்கனுக்கு ஆத்திரம் வந்தது. "அட பாவமே! இவன் சுமை சுமக்கிருனே என்று இரங்காது அவன்வீட்டு வாசலிலும் போய் நிற்கவேண்டும் என்கிருயே" என்று தலையிலிருந்த பாரத்தை இரு கைகளிலும் தாங்கிக் கொண்டு கூறினுன். இதற்கிடையில் இராசலிங்கம் கை தட்டி இவர்களை யழைத்தார். இவர்களும் விரைவாகச் சென்ருர்கள். "நல்ல காரியந்தான். ஊரிலே நோய் வர வரக் கூடி விட்டது. இப்படி ஒன்று நடத்தினுல் நல்லது. சரி நான் இருபத்தைந்து கொத்தரிசி கோயிலடிக்கு அனுப்புகிறேன்" என்ருர் இராசலிங்கம்.

சொக்கனும், அருளம்பலமும் ஒருவரை யொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர். அந்தச் சிரிப்பில் 'இந்த உலோபியும் மனமிளகி அரிசி கிடையாத காலத்தில் இவ்வளவு கொடுக்கிருனே' என்ற தொனி கலந்திருந்தது. தாங்கள் கொணர்ந்த அரிசியையும் கோயிலிற் சேர்க்கும்படி கூறிவிட்டு வெறும் சாக்குடன் அடுத்த வீட்டுக்குப் போனுர்கள்.

* * *

அடுத்த, வீடோ சிறியது. மண் சுவர்தானுமில்லை. சுற்றிவரக்கிடுகுகளால் மறைக்கப்பட்டிருந்தது. வீட்டின்முன் ஒரு பூவரச மரம் சற்று உயர்ந்தது. இலைகள் நிறைந்திருந்தன. அந்த வீட்டு அம்மாளின் மனம்போல அந்த மரம் தண்ணிழல் தந்து நின்றது.

அந்த மரத்தின் கீழே ஒரு பெண், வயது ஐம்பதுக்கு மேலிருக்கும். கழுத்தில் நகையொன்றுமில்லை. காதிலிருந்த ஆபரணம் பழைய நாகரிகத்தை விளக்கிற்று. யாழ் வல்லுநனின் கை விரல்கள் எவ்விதம் ஒவ்வொரு தந்தியையும், மாறி மாறித் தட்டுகின்றனவோ அப்படியே அந்தக் கிழவியின், கை விரல்கள் தாமிழைக்கும் ஓலைப் பெட்டியின் ஒவ்வொரு இதழையும் பிடித்து மடக்கிக்கொண்டும் மடிந்த இதழை மேலே தட்டிவிட்டுக்கொண்டுமிருந்தன. இரவுக்கு என்னசெய்வது! பாவம் உண்டு திரிகிற பிள்ளை ஒன்றைப் பட்டினியால் வாட்டுகிறேனே! அவனைத்த பிள்ளைகள் எப்படி யிருக்கிருர்கள். தோட்டஞ் செய்ய வென்ருற் தோட்டமுமில்லையே; ஐயோ! நேற்றிரவு பட்டினி! இன்றிரவும் பட்டினியா? பகலில் ஒன்றுந் தின்னுவிடினும் இரவிலும் ஒன்றுந் தின்னமுடியாமற் கிடக்க முடியுமா? தெய்வமும் செல்வர்பக்கமே! கூப்பன் வாங்கவும் காசில்லையே! பணக்காரர் வீட்டு நாயாகவாவது எங்களைப் பிறக்க வைத்திருக்கக் கூடாதா" என உள்ளம் பேசியது.

* * *

'அம்மா பூசைக் கரிசி' என்ருன் சொக்கன். கலங்கியிருந்த கண்களைத் துடைத்துக் கொண்டே நிமிர்ந்து பார்த்தாள்; "அரிசி ...... உம் ...... சாமிக்குத்தானே" என்று கேட்டான். "ஆமாம் சாமிக்குத்தான். ஆனால் எல்லாம் சாமி தின்ன மாட்டாது" என்ருன் சொக்கன். "அப்பனே! சாமி எங்களை அரிசி கொடுக்கக்கூடிய நிலையில் வைக்கவில்லை. உண்மையாகவே இந்தக்கிழமை கூப்பனுக்குச் சாமான் எடுக்கவில்லை. என்ன செய்ய...... சரி இந்தக் காசைக் கோயிலுக்குக் கொடுத்துவிடு" என்று ஒரு பத்துச் சதத்தை நீட்டினள். அருளம்பலம் வாங்கிக் கொண்டான்.

'சரி பூஜைக்கு வருவீர்கள் தானே' என்ருன் சொக்கன். அதிலிகழ்ச்சி கலந்திருந்தது. அதை யறியாள் அந்தக் கிழவி. "இன்றைக்குச் சந்தையிலே பெட்டி நல்ல விலையாயிருக்கும் நான் சந்தைக்குப் போகிறேன். என் மகனை......" என்றிழுத்தாள் கிழவி. சொக்கன் தலையை யாட்டினுன்.

* * *

மத்தியானம் ஒருமணி இருக்கும். சுப்பு குளித்துவிட்டு வந்தான்: "சுப்பு, மரவள்ளிக் கிழங்கு சுட்டு வைத்திருக்கிறேன். தின்றுவிட்டுக் கோயிலுக்குப் போ. இப்போதுதான் மேளங் கேட்கிறது. சாமிக்கு அபிஷேகம் முடிந்ததும், சோறு கொடுப்பார்கள்." என்று அவனது முதுகைத் தடவிக் கொண்டே கிழவி கூறினுள். அவளின் மகன்தான் சுப்பு. வீட்டு நிலைமை மோசம். சொல்லைத்தட்ட மனமில்லை. அதனுல் அவன் "உம்..." என்று ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே கூறிவிட்டு, "நீ கிழங்கைத்தின், நான் கோயிலுக்குப் போகிறேன்" என்று சொல்லிப் போய் விட்டான்.

சுப்பு வருவதைத் தூரத்தே கண்டான் சொக்கன். "சரிவரட்டும்...அடே, சுப்பு வந்தவுடன் நான் சிரிப்பேன் நீங்களும் சிரியுங்கடா" என்று ஆயத்தப்படுத்திக்கொண்டு சுப்பு கிட்ட வந்ததும் சொக்கன் கொல்லென்று சிரித்தான். கூட நின்றவர்களும் சிரித்தார்கள். சுப்புவும் காரணமறியாமற் சிரித்தான். பக்கத்தே நின்றவர்கள் திரும்பிப்பார்த்துச்சிரித்தார்கள். அவர்களைச் சுற்றி ஒரு கூட்டம் கூடி விட்டது. இதைப் பயன்படுத்திக் கொண்டான் சொக்கன். "ஏது சாமி இந்தப் பக்கம்" என்று கேட்டதும் தன்னை யிகழ்ந்தே சிரித்தார்கள் எனத் திடம் பண்ணிக்கொண்டு 'இல்லை மேளங் கேட்டது. அதனுல் வந்தேன்' என்று சுப்பு சொன்னுன். "ஓகோ! அப்படியா! இங்கு சோறு போடுவார்கள் என்று தெரியாதோ?" என்று சட்டெனக் கேட்டான் சொக்கன். "தெரியும்......" என்ருன் சுப்பு. 'தெரிந்ததா? எவ்வளவு அரிசி கொடுத்தாய்' என்று புண்ணில் வேலை நுழைத்ததுபோலக் கேட்டான் சொக்கன். சுப்பு ஒரு கணம் அப்படியே தம்பித்து நின்ருன். 'சொக்கா' என்று நல்லையர் கூப்பிட்ட சத்தம் கேட்டு சொக்கன் ஓடிவிட்டான். கூட்டங்கலைந்தது.

"எவ்வளவு அரிசி கொடுத்தாய்? உண்மைதான், உரிமையில்லாவிடத்து உனக்கென்ன வேலை?" "உரிமையா? ஆண்டவன் சந்நிதியில் ஏழையுஞ் செல்வனுக்கும் வேரு?"

"மானத்தைக் கைவிட்டு ஒரு வயிறு சோற்றுக்காகப் போலி நியாயங்களைக் காட்டுகிருயே!"

"போலி நியாயமா? அப்படித்தானிருந்தாலும் ஐயோ வயிறு பசிக்கிறதே!"

"அட மூடமே! வயிற்றுப் பசியை நினைத்துத்தானே இந்தக் கூட்டத்தில் மரியாதை கெட்டாய்"

"மரியாதைக் கேடா. சொக்கன் பேசினதால் என் மரியாதை குறைந்து விட்டதா"

"மரியாதை குறையவில்லை. இன்னும் கேவலமடையப்போகிருய்"

"கேவலமா? ஏன்"

"நீ அரிசி கொடாததினுல்..."

"அப்படியானல்"

"நீ சாப்பிடும்போது எல்லாரும் பார்த்துச் சிரிப்பார்கள்"

"அப்படியானுற் சாப்பிட வேண்டாமா"

"வேண்டாம்"

"ஆண்டவன் கோபிப்பாரா"

"ஏழை, செல்வம் என்று பிரித்துவைத்து இகழச்செய்யும் ஆண்டவன் கோபிக்கிறதாவது"

"இப்போ என்ன செய்ய"

"போ"

"எங்கே"

'வீட்டுக்குத்தான் போ...போ'

"ஐயையோ பசிக்கிறதே"

"உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம்மனையில் உண்ணுமை கோடிபெறும் போ"

"பிறர் நகைப்பாரோ"

"உன்னைக் கவனிப்பார் ஒருவருமில்லை நீ போ" இதுவேறு யாருமல்ல. சுப்புவின் மனதில் நடந்த போராட்டம். கடைசியில் சாப்பிடாமலே போய்விடுவதென்று தீர்மானித்துக் கொண்டான்.

* * *

கோயிலில் அபிஷேகம் முடிந்து பூஜையும் முடிந்தது. அப்பொழுது கோயில் வாயிலில் சனக்கூட்டமில்லை. வெளியில் நின்று பார்த்தான். முருகன் விக்கிரகம் பூரண அழகுடன் சோபித்தது. பார்த்தான் சுப்பு. "சுவாமி! உம் மனம்பூரிக்க இன்று அபிஷேகம் நடந்தது. அதனுல் ஊராரும் மகிழ்ச்சியடைகின்றனர். ஆனல் வறுமைப் பிணியினுல் நானிகழ்ச்சியடைந்தேன். அதுவும் உன் செயலே." என்று கூறி விம்மினுன்.

அவன் நேரே வீடுசென்ருன். வீட்டிற் தாயாரில்லை. சந்தைக்குப் போய்விட்டாள். சுப்புவுக்குப் பசி பொறுக்க முடியவில்லை. யாரைக் கேட்பது? தெய்வத்துக்குத்தானும் இரக்கமில்லையே!! என நேரஞ் செல்லச் செல்லப் பசி வயிற்றைப் பிடுங்கியது. முகத்தில் வேர்வைத் துளிகள் அரும்பின. தலை சுழன்றது. நிறகவும் முடியவில்லை.

பார்த்தான் முற்றத்தில் குடம் இருந்தது. ஆம். இயற்கையன்னையின் பானம் அதில் இருந்தது. தானுமுணவாகி உணவுப் பொருள்களைத் தருவதற்குக் காரணமுமாகிறது: அந்தப் பானம் அதனுல் முகத்தைக் கழுவிக் கொண்டான்: பசியாறப் பருகினுன்.

மெல்லிய காற்று வீசியது. "ஆ! என்ன சுகமாயிருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே முற்றத்திலிருந்த மரத்தின்கீழ் படுத்துக்கொண்டான்.

* * *

சந்தையினின்றும் தாய் வந்ததும், மகனைப் பார்த்தாள். "பாவம்! கிடக்கட்டும் என்று எண்ணிக்கொண்டே கிடந்த கிழங்கை உண்டுவிட்டு உறங்கினுள்.

---


## 213-வது இலக்க புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

**பிரத்தியேகப் போலிக் கூப்பன்கள்**

வியாபாரிகள் எவராவது பிரத்தியேக கூப்பனிலுள்ள நீர் அடையாளங்களைக் கண்டு கொள்ள முடியாவிட்டாலும் இந்த நிலையத்தை (department) ச் சார்ந்த அலுவலதிகாரி எவருடைய ஒப்பமாவது கையொப்ப மழுத்தி (Frank) யால் போடப்பட்டிருப்பினும் அவ்வகையான கூப்பனை ஏற்றல் கூடாது.

2. புதிய பிரத்தியேகக் கூப்பன் கள்ளமாக அச்சடிக்கப் பட்டிருப்பதாக நம்ப இடமிருப்பதால் இவ் அறிவித்தல் வெளிப் படுத்தப் படுகிறது.

ஈ. ஞெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு 26-2-1946
[2670]


## கொடியின் தத்துவம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இப் பரந்த உலகத்தில் இருக்கிறது என்று நாம் நம் ஒன்றுபட்ட முயற்சியால் - உன்னத இலட்சியத்தால்-செயலால் - உலக மக்களுக்குத்தெரிவிக்கவேண்டும்.

அல்லல் மிகுந்த இப்பரந்த உலகத்தில் கணத்துக்குக் கணம் எத்தனையோ மாறுதல்கள் உண்டாகின்றன. தமிழர்களாகிய நாமும் இம்மாறுதலுக்கு இணங்க இயங்கி வரவேண்டும். இன்று பல நெருக்கடிகளுக்கிடையில் - யுத்த நெருக்கடி நீங்கினுலும், அதன் எதிரொலியாகக் கிளம்பியுள்ள பல நெருக்கடிகளையும் தொலைத்து ராஜீயவாதிகள் முதல் அனைவரும் எதிர்பார்க்கும் விரும்பும் புதிய உலக அமைப்பு, கூடிய சீக்கிரம் ஏற்படத்தான் போகிறது. அச் சமயத்தில் உலகத்துப் பழங்குடி மக்களாகிய தமிழர்கள் ஒதுங்கியிருக்கக் கூடாது; முன்னணியில் நின்றுழைக்க வேண்டும். காலவேகம் தமிழ் இளைஞர்களிடையே ஒரு விழிப்பை உணர்ச்சியை - உண்டுபண்ணித்தான் இருக்கிறது. மற்றநாட்டு வாலிபர்கள் நிலையை – போக்கைக் கவனிக்கும்போது அது போதாதென்றே தோன்றுகிறது. தற்போது ஏற்பட்டுள்ள உணர்ச்சியையும் ஊக்கத்தையும் வெற்றாரவாரத்திலும் வீண் முயற்சிகளிலும் சிதற விடாமல் தமிழ்ச் சமுதாய நலத்துக்காகவும், தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும், தமிழ்க் கலை நாகரிக ஆக்கத்துக்காகவும் பயன்படுத்தவேண்டும். தமிழ் மொழி, இலக்கியம், கலை நாகரிகம், சமயம், அரசியல் ஆகியவைகளை நல்ல முறையில் வளர்த்துத் தாங்களும் உலகில் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்று தமிழ் இளைஞர்களிடையே ஏற்பட்டுள்ள உணர்ச்சியைத் திரட்டி உருவாக்கவேண்டியது தமிழ்த்தொண்டர்களின் கடமையாகும்.


## ORDER NISI

In the District Court of Jaffna

In the matter of the last will and testament of the late Chellappah Sivasubramaniam of Uduvil. *Deceased.*

*Testamentary Jurisdiction* } No. 379

Leelavathy widow of Chellappah Sivasubramaniam of Uduvil. *Petitioner.*

1. Sandrapala Sivasubramaniam
2. Selvasundram Sivasubramaniam both of Uduvil.
3. Appadurai Rajendra of Bank of Ceylon, Colombo. *Respondents*

This matter coming on for disposal before H. A. de Silva Esquire, District Judge, Jaffna on the 12th day of March 1945 in the presence of Mr. P. Nagalingam, Proctor on the part of the petitioner and on reading the affidavit of the petitioner:

It is ordered that the abovenamed 3rd respondent be appointed guardian-ad-litem over the minors the 1st and 2nd respondents abovenamed for the purpose of representing them and protecting their interests in these proceedings and that the petitioner be declared entitled to probate to the estate of the abovenamed deceased and the same be issued to her accordingly unless the respondents abovenamed or any others shall on or before the 9th day of July 1945 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 24th day of May 1945
Sgd. S. J. C. Shockman
District Judge

Time to show cause is extended and allowed for 12-3-46.
Sgd. R. R. Selvadurai
[2668] District Judge



# GOOD NEWS

## BOOKS FOR SCHOOLS

Systematic Qualitative Analysis by Caven ... Rs. 5/95
Notter & Firth's Hygiene-New & Revised Edition Rs. 11/25
Collin's Popular Dictionary - New Clear Type Edition ... Rs .4/25
Biology for Medical Students by Hentschel & Cook ... Rs. 16/80
Text-book of Botany by Lowson & Sahni ... Rs. 8/50
A Class book of Botany by Dutta ... Rs. 8/25

## SANMUGANATHANS' MISCELLANY

English Social History-Chaucer to Victoria by Trevelyan ... Rs. 17/—
Parliament - Jennings ... Rs. 20/—
The Constitutional Problems in India by Coupland ... Rs. 11/—
Evolution of England by Williamson ... Rs. 11/25
Foot Prints on the sands of Time by Pearce ... Rs. 2/75
Netaji Bose - a Life sketch with attractive illustrations ... Rs. 4/—
Prison Days - Vijaya Lakshmi Pandit ... Rs. 4/30

**The Empire at work series :**

Our letters in the Post -/90
Rubber and its many uses -/90
Cocoa and Chocolate -/90
The arm of Law 1/15
The Story of Gold -/90
The Story of Transport -/90

Studies in Tamil Literature and history by Ramachandra Dikshitar ... Rs. 6/-

**An Excellent Range of New Books**
**JUST RECEIVED**

*CHOICE is entirely YOURS.*
*A visit will convince you.*

**S. S. Sanmuganathan & Sons**
PUBLISHERS & BOOK SELLERS
VANNARPONNAI, :: JAFFNA.
[2659]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NATIONALIST TAMIL WEEKLY
# THE EELAKESARI
Largest and most Influential Circulation in Ceylon & India

Vol. 16 | Chunnakam, Sunday March, 10, 1946 | No. 32

## நற் சுகத்திற்கு




எங்களிடம் P. S. R. சந்தனாதித் தைல வகைகளும் விற்பனைக் கிருக்கின்றன.

[2575]

## கோட்டு விற்பனவு

இல. 1559

அச்சுவேலி தெற்கு
சின்னத்தம்பி நல்லதம்பி
வழக்காளி

வண்ணார்பண்ணை, கன்னாதிட்டி ஒழுங்கை,
வயிரமுத்து கைம்பெண் செல்லம், அச்சுவேலிதெற்கு காலஞ்சென்ற வயிரமுத்து சோமசுந்தரத்தின் ஆஸ்திக்குப் பிரதிகாரியஸ்தராகவும்,
எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 1559-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி, 1946-ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 30-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை:-** முதல் வட்டி ரூபா 393-16-ம்: இதில் ரூபா 350-க்கு 30-8-44 திகதி தொடக்கம் 20-11-44 திகதி வரைக்கும் 100க்கு 10வீதவட்டியும், இன்னும் ரூபா 231-00-ம் இதில் ரூபா 227-க்கு 30-8-44 திகதி தொடக்கம் 20-11-44 திகதி வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் இறுபடும் வரைக்கும் 100-க்கு 9 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 129-89 சதம்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலிக் கோவிற்பற்று அச்சுவேலி தெற்கிறை "உருக்கலட்டி" நிலப்பரப்பு பதினாலும் (14-ம்) செய்பயிர் வான்பயிர்களும் கிணறும், பனைகள் வடலிகளும் எல்லை: கிழக்கு, தம்பிப்பிள்ளை பெண் முத்துப்பிள்ளைக்கும், வெற்றிவேலு சுந்தரத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு, சுப்பர் வேலுப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு, காசிப்பிள்ளை பெண் வள்ளியம்மைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு, சுப்பர் சின்னப்புவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதடங்கலும். முற்பதிவு $K\frac{134}{205}$.

Sinnathamby Sangarappillai
சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை
3—3—46 [2673]

# குருவாசகம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டைவதோடு எண்ணிறந்தோரையும் ஈசன் திருவடியண்டை சேர்த்து விடுகின்றனர்.

### மக்கள் பலவகையினர்

**ம**னிதனை ஒரு தலையணை உறைக்கு ஒப்பிடலாம். உறைகள், கருப்பு, சிவப்பு, பச்சை முதலிய பல நிறங்கொண்டவைகளாகவிருக்கலாம். ஆனால் அவைகள் எல்லாவற்றுள்ளும் இருப்பது ஒரே பஞ்சுதான். அவ்விதமே மனிதரும், சிலர் அழகாயிருக்கிறார்கள். ஆனால் இவர்களெல்லோருள்ளும் உறையும் ஈசுவரன் மாத்திரம் ஒருவனே.

* * *

சாணத்தையுருட்டிச் செல்லும் வண்டுபோன்றது லௌகீகருடைய மனம். வண்டு சாணத்திலன்றி வேறொன்றிலும் வசிக்க விரும்பாது. நறுமணம் வாய்ந்த தாமரை மலரில் தங்கும்படி அதனை விட்டால் அது மிக்க வேதனையுறும். அதுபோல உலக வாழ்க்கையில் ஈடுபட்டு அதிலேயே கிடந்துழல்பவர் உலக விஷயங்களைப்பற்றிய பேச்சுஒன்றைத் தவிர வேறெதையும் விரும்பார்; ஈசனது மகிமையும் அவர் திருநாமமும் சொல்லப்படுமிடங்களினின்றும் விலகிவிடுவர்; வீணான சோம்பேறிகள் பேசும் பேச்சுக்களைக் கேட்டு ஆனந்தமடைவர்.

* * *

முதலையின் மேற்றோல் எவ்வித ஆயுதத்தாலும் வெட்டுப்படாதபடி அவ்வளவு கடினமாயிருக்கும். அதுபோல சம்சாரத்தில் ஆழ்ந்திருக்கும் மனிதனுக்கு எவ்வளவு தத்துவோபதேசஞ் செய்தாலும் அது அவன் மனதிற்புகாது.

* * *

சூரியனுடைய வெளிச்சம் எல்லாப் பொருள்களின்மேலும் சமமாய் வீழ்ந்த போதிலும் கண்ணாடி, ஜலம், பளபளப்பான உலோகம் ஆகிய இவைபோன்ற தெளிவான பொருள்களே அவ்வெளிச்சத்தை நன்றாய்ப் பிரதிபலிக்கச் செய்கின்றன. அதுபோலப் பகவான் எல்லாருள்ளும் இருந்தாலும் பக்தர்களுடைய இருதயத்திலே நன்றாய்ப் பிரகாசிக்கின்றார்.

* * *

முட்களைத் தின்பதினால் இரத்தம் வாயிலிருந்து சொரிந்தாலும் ஒட்டகம் பின்னும் அம்முட்களையே மகிழ்வுடன் கடித்துண்ணும். அதுபோல இவ்வுலக மாயையில் ஈடுபட்டோர் என்ன கஷ்டங்கள் வரினும் அதிலேயே யுழல்வார்; அதிக துக்கத்தை யளிக்கக்கூடிய இழவு ஒன்று நேரிட்டாலும், வெகு சீக்கிரத்தில், அதனை மறந்துவிட்டு, அத்தகையதொன்றும் நேராதது போலக்களிப்புடன்வாழ்கின்றனர்.

### மதம் அனுஷ்டித்தற் குரியது

**வேதம்** புராணம் முதலியவைகளி லடங்கியுள்ளவைகளைப் பற்றி எவ்வளவுகாலம் ஆராய்ச்சி செய்யவேண்டும்? எம்பெருமானைத் தரிசிக்கும்வரையிலேதான் ஒருபூவின்மேல் உட்காரும்வகையிலேதான் தேனீ ரீங்காரம்செய்யும். தேனைக் குடிக்க ஆரம்பித்தவுடன் ரீங்காரமெல்லாம் நின்றுவிடுகின்றது.

* * *

கிரந்தங்கள் (புத்தகங்கள்) எல்லாம் கிரந்திகள் (முடிச்சுகள்) என ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவர். விவேகமும், வைராக்கியமுந் தராத வெறும் படிப்பெல்லாம் ஒருவனுடைய செருக்கையும் வீண் பெருமையையும் அதிகமாக்குகின்றன. (மனதிலுள்ள முடிச்சுக்களை அதிகமாக்கின்றன)

* * *

ஒரு குடத்தில் நீர் நிறையும் போது "கபக்", "கபக்". என்னும் ஓசை கேட்கிறது. குடம் நிறைந்தவுடனே ஓசையும் நின்று விடுகிறது. அதுபோலவே, ஈசுவரனைக் காணாதவன் அவரைப் பற்றி வீண்வாதம் புரிகிறான். அவனைத் தரிசித்தவனோ மௌனமாகவே பரமானந்தத்தை அநுபவிக்கிறான்.

* * *

ஒரு புருஷனுக்கும் அவன் மனைவிக்குமுள்ள உறவை ஒரு சிறு பையனுக்கு விளங்கக் கூறுவது எவ்வளவு கஷ்டமோ, அவ்வளவு கஷ்டமாகும் பரமானந்தப் பரவச நிலையை இவ்வுலக வாழ்க்கையில் ஆழ்ந்தவனுக்கு விளக்குவதும்.

### இல்லற சாதனமுறை

**இவ்வுலக** ஆசைகளின் நடுவிலிருந்து கொண்டே பக்தி சாதனைகள் செய்து மனதை யடக்கியாழ்பவனே உண்மை வீரன். உண்மை வீரனுக்கே பெரிய பாரத்தைத் தன் தலை மீது தாங்கிச் செல்லும் போதும் எந்தத் திசையிலும் திரும்பிப் பார்க்க முடியும். அதுபோல மனதையடக்கியாளும் மனிதன் உலகத்திற் செய்ய வேண்டிய கடமைகளாற் சூழப்பட்டிருந்தபோதிலும் தன் நோக்கத்தைக் கடவுளின் மீதே வைத்திருக்கிறான். * *

ஒருவகைச் சங்கீதக்காரன் ஒரே நேரத்தில் இரண்டு கருவிகளையிசைப்பதைக் கண்டதில்லையா? இல்லறத்திலிருக்கும் மனிதர்களே! நீங்கள் அவ்வண்ணம் உங்களுடைய இரண்டு கைகளாலும் லௌகீக கருமங்களைச் செய்து கொண்டிருந்தாலும், உங்களுடைய மனத்தை ஈசனிடத்து வைத்து அவனுடைய திருநாமத்தை யுச்சரிப்பதை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள்.

## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி
### 1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை:**
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
வேண்டிய விபரங்களை [illegible]

S. [illegible]
சிறுப்பர்

(2651)

## யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபி விருத்திச் சங்கப் பரீட்சைப் பேறுகள்—1945

**பண்டித பரீக்ஷை**
**முதற் பகுதி 3-ம் பிரிவு**

J 5 *சின்னத்தம்பி சின்னையா, நடேசன் ஆசிரியகலாசாலை, திருநெல்வேலி.

**பாலபண்டித பரீட்சை 2-ம்பிரிவு**

J 26 நாகநாதர் கார்த்திகேசு, திருநாவுக்கரசு வித்தியாசாலை, புங்குடுதீவு.

**பாலபண்டித பரீட்சை 3-ம்பிரிவு**

J 10 ஆறுமுகம் பொன்னம்பலம், கரணவாய் வடக்கு, கரவெட்டி; J 13 வல்லிபுரம் நல்லதம்பி, நடேசன் ஆசிரியகலாசாலை, திருநெல்வேலி; J 15 செல்வி நல்லம்மா சுப்பிரமணியம், சைவமகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்; J 28 கந்தையா வைத்தியநாதர், சைவாங்கிலவித்தியாசாலை, வட்டுக்கோட்டை; J 30 செல்வி பத்மலோசனி சின்னத்தம்பி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்; J 31 ஆறுமுகம் சதாசிவம், அராலி தெற்கு, வட்டுக்கோட்டை; PP 3 கதிரிப்பிள்ளை இரத்தினம், ஆசிரியர், உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை; CH 7 வேலுப்பிள்ளை கந்தையா, தெல்லிப்பழைவடமேற்கு, இளவாலை; BT 1 செல்வி காங்கேஸ்வரி நாகலிங்கம், மெத்தைவீட்டு வீதி, மட்டக்களப்பு; BT 2 மயில்வாகனம் நாகலிங்கம், மண்டூர், கீழ்மாகாணம்; BT 3 இளையதம்பி செல்வத்துரை பட்டிருப்பு, அரசினர் ஆசிரியகலாசாலை, கீழ்மாகாணம்.

**பாலபண்டிதவகுப்பு (நூனசித்தி)**

J 32 நன்னிஅப்பர் நடேசர், சிவன்கோவிலடி, வட்டுக்கோட்டை (2-ம் தொகுதி); J 40 தம்பையா ஆறுமுகம், நடேசன் காவியபாடசாலை, திருநெல்வேலி (2-ம் தொகுதி); PP 6 செல்வி திலகவதியார் சுப்பிரமணியம், தும்பளை, பருத்தித்துறை (2-ம் தொகுதி); C 3 வைத்தியர் பொன்னையா, சென் மேரீஸ் தமிழ் வித்தியாசாலை, கொழும்பு (1-ம் தொகுதி).

**பிரவேசபண்டிதவகுப்பு 3ம்பிரிவு**

J 38 செல்வி கனகம்மா விசுவலிங்கம், கோவிற்தெரு, இருபாலை, கோப்பாய்; CH 20 செல்வி பாக்கியம் சபாபதி, கந்தையா - காவியவகுப்பு, மெய்கண்டான் வித்தியாசாலை, பண்ணாகம்; CH 23 முத்துவேலு வைத்திலிங்கம், மெய்கண்டான் வித்தியாசாலை, பண்ணாகம், சுளிபுரம்; BT 7 செல்வி ஸ்பிரித்தம்மா பர்ணாந்து, பரி. தெரேசா கன்னியாஸ்திரிமடம், உப்போடை, மட்டக்களப்பு; BT 9 செல்வி தங்கம் தம்பியப்பா பரி. தெரேசா கன்னியாஸ்திரிமடம், உப்போடை, மட்டக்களப்பு; BT 12 விரகநாதன் இரத்தினசிங்கம், பண்டிருப்பு, கல்முனை; BT 14 செல்வி பார்வதியம்மா தம்பியப்பா, காமல் கன்னியாஸ்திரிமடம், கல்முனை; BT 18 செல்வி அருளம்மா தம்பியப்பா, காமல் கன்னியாஸ்திரி மடம், கல்முனை.

### B. சம்ஸ்கிருத பரீக்ஷை

**பண்டிதவகுப்பு 1-ம்பகுதி 3-ம்பிரிவு**

J 40 *கார்த்திகேசு தம்பிப்பிள்ளை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்; J 41 *செல்லையா நடராசா, கேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

**பாலபண்டித வகுப்பு 3-ம் பிரிவு**

J 42 சிவசுப்பிரமணியக் குருக்கள் வரதராசசர்மா, பொன்னாலை, சுளிபுரம்; J 43 [illegible]தர் கந்தையா ஆசிரிய[illegible] தெற்கு T M S பாடசாலை, சுன்னாகம்.

**பிரவேசபண்டிதவகுப்பு 3ம்பிரிவு**

J 45 தியாகராஜக் குருக்கள் நடனசபாபதி சர்மா, அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி,

*இவ்வடையாளமிடப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு, பரீட்சையின் 2-ம் பிரிவில் சித்தியடைந்தாலொழிய, தராதரப்பத்திரம் வழங்கப்படமாட்டாது.

அயன் சண்டிமன்
வித்தியாதிகாரியும்
யா. ஆ. தி. பா. சங்கத் தலைவரும்
வித்தியா கந்தோர்,
கொழும்பு, 6-2-46.

**உலகத்தில்** பற்றற்று வாழ்வது எப்படியென்று அறிவாயா? சேற்றில் உலவும் மச்சத்தைப் போல் வாழவேண்டும். அதுசேற்றினுள் வாழுகின்றது. ஆனால் சேறு அதன்மேல் படவில்லை.

* * *

தண்ணீரில் படகு இருப்பதால் யாதொரு அபாயமுமில்லை; ஆனால் படகினுள்ளே தண்ணீர் நுழைந்துவிடக் கூடாது; நுழைந்தால் படகு மூழ்கிவிடும். அதுபோல, பக்தனொருவன் இருகஸ்தனாக உலகத்தில் இருப்பதால் யாதொரு கெடுதலுமில்லை; ஆனால் உலகப்பற்று மாத்திரம் அவன் மனதில் நுழையும்படி விடக்கூடாது.

## SAMUEL SONS & Co., Ltd.,
HOSPITAL ROAD, JAFFNA
T'GRAM: ECHIRON T'PHONE: 62
Head Office:- 371, OLD MOOR ST., COLOMBO

● இரும்பு
கம்பிகள்
கேடர்கள்
சிலாகைகள்
அச்சுகள்
தகடுகள்

○ நீர் இறைக்கும்
யந்திரங்கள்
குழாய்கள்
தாங்கிகள்

○ கல்வனேஸ்
தகடுகள்
தாங்கிகள்
வாளிகள்

● கைத்தொழிற்குரிய
ஆயுதங்கள் மற்றும்
கமத்தொழிற்
கருவிகளும்

● பித்தளை
தகடுகள்
பூட்டுகள்
பிணைச்சல்கள்

○ மைவகைகள்
மை எண்ணெய்
வானிஸ்

சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்
இலவச விலை விபரங்களுக்கு எழுதவும்

### சாமுவேல் சன்ஸ் & கம்பெனி லிமிரெட்
ஆஸ்பத்ரி ரோட் : : யாழ்ப்பாணம்
தந்தி: 'எச்அயர்ன்' 'போன்: 62

[2658]

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு 'திருமகள் நிலையம்' நா. பொன்னையா அவர்களால், சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில் 1946 மார்ச் 10உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org